
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 அக்டோபர் 08 - அக்டோபர் 14 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 27




## இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின்

# எழுச்சிமிகு 15வது மாநில மாநாடு

**திருச்சியில் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் 15 வது மாநில மாநாடு மற்றும் 70வது ஆண்டு தொடக்க விழா திருச்சியில் நடைபெற்றது.**




முதல் நிகழ்வாக பொது மாநாடு துவக்க விழா 3.10.2023 அன்று திருச்சி எல்.கே. எஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியினை முன்னாள் மாநிலச் செயலாளர் மாலா பாண்டியன் பெற்றுக்கொண்டார். முன்னாள் மாநிலச் செயலாளர் வசந்தா ரத்தினவேலு கொடியேற்றி வைத்தார். முன்னாள் மாநில துணைச் செயலாளர் டி.லலிதா பெற்றுக்கொண்டார். இதைத்தொடர்ந்து மாதர் தேசிய சம்மேளனத்தின் முன்னோடிகள், தியாகிகளின் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

சம்மேளனத்தின் சார்பில் நடைபெற்ற பெண் உரிமைகளுக்கான போராட்டங்கள் குறித்த கண்காட்சியை பெரியார் மருத்துவவியல் கல்லூரி முதல்வர் செந்தாமரை தொடங்கி வைத்தார். பிரதிநிதிகள் மாநாட்டிற்கு மாநில தலைவர் பத்மாவதி தலைமை வகித்தார். வரவேற்புக்குழு தலைவர் பானுமதி வரவேற்புரை ஆற்றினார். மாநிலச் செயலாளர் ஜி.மஞ்சுளா அறிமுக உரையாற்றினர். இதைத் தொடர்ந்து மாநாட்டைத் தொடங்கி வைத்து, மாதர் தேசிய சம்மேளனத்தின் அகில இந்திய பொதுச்செயலாளர் ஆனி ராஜா உரையாற்றினார்.

மேலும், தமிழ்நாடு உழைக்கும் பெண்கள் அமைப்பின் இணை ஒருங்கிணைப்பாளர் சாந்தி, ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் பரிமளா, திருச்சி மாநகர துணை மேயர் திவ்யா, திமுகவின் மத்திய மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, மதிமுக மகளிர் அணி பொதுச் செயலாளர் ரொக்கையா, தமிழ்நாடு முஸ்லிம் லீக் முஸ்லிம் மகளிர் பேரவை மாநில பொருளாளர் ஷான் ராணி ஆலிமா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் திருச்சி மாவட்ட தலைவர் பைரோஸ் ஆகியோர் வாழ்த்துரை ஆற்றினர். தொடர்ந்து மாவட்ட செயலாளர் அஞ்சுகம் நன்றியுரையாற்றினார்.





மாநாட்டின் தலைமைக் குழுவாக பத்மாவதி, தமயந்தி, சுந்தரவல்லி, ராஜலட்சுமி ஆகியோர் செயல்பட்டனர். அஞ்சலி தீர்மானத்தை நிஷா சத்தியன் வாசித்தார். மாநிலச் செயலாளர் ஜி.மஞ்சுளா வேலை அறிக்கை சமர்ப்பித்தார்.

பின்னர், முன்னாள் மாநிலச் செயலாளர் வசந்தா ரத்தினவேலு, அனுராதா, வழக்கறிஞர் சாந்தகுமாரி, மாலா பாண்டியன் ஆகியோருக்கு பாராட்டு நிகழ்வு நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற கருத்தரங்கில் ஏஐடியுசி தேசியச் செயலாளர் வகிதா நிஜாம், பெண்கள் மீதான உழைப்புச் சுரண்டல், பிற்போக்குகள் என்ற தலைப்பில் திராவிடர் கழக துணை பொதுச்செயலாளர் மதிவதனி, இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் மீதான தாக்குதல் என்ற தலைப்பில் மகளிர் வழக்கறிஞர் சங்கத் தலைவர் சாந்தகுமாரி, சமூகத்தில் மலிந்திருக்கும் சாதி, மத மேலாதிக்கம் என்ற தலைப்பில் எழுத்தாளர் ஜீவசுந்தரி ஆகியோர் கருத்துரையாற்றினர்.

**இதைத் தொடர்ந்து 73 பேர் கொண்ட புதிய மாநிலக்குழு தேர்வு செய்யப்பட்டது. இதில் மாநிலத் தலைவராக மஞ்சுளா, செயலாளராக கண்ணகி, பொருளாளராக ரேணுகா தாமஸ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.**

பல்லாயிரக்கணக்கான மகளிர் பங்கேற்ற பேரணிக்கு கண்ணகி தலைமை வகித்தார். பேரணியை வளர்மதி துவக்கி வைத்தார். இதைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு பத்மாவதி தலைமை வைத்தார். திருச்சி மாவட்ட தலைவர் பார்வதி வரவேற்புரை நிகழ்த்தினார். அகில இந்திய பொதுச்செயலாளர் ஆனி ராஜா, தலைவர் அருணா ராய், திருநங்கை ரேவதி, மஞ்சுளா, கண்ணகி, தமயந்தி, ரேணுகா தாமஸ், சுந்தரவல்லி, நிஷா சத்தியன், லலிதா, ராஜலட்சுமி, வளர்மதி, ரம்யா, அஞ்சுகம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். திருச்சி புறநகர் மாவட்ட நிர்வாகி கவிதா நன்றி உரையாற்றினார்.

தொகுப்பு: இப்ராஹிம்





கட்சிக் கடிதம்

# துடைப்பத்தை எடுப்பீர்! நாட்டை தூய்மையாக்குவீர்!



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**நாட்டின் மாமன்னர், பைஜாமா, கலர் ஜிப்பா சட்டை, தோளில் நீண்ட அங்க வஸ்திரம், காலில் கட் ஷூ, துடைப்பத்துடன் மிகச் சிறப்பாக போஸ் கொடுத்து அந்தப் படம் அனைத்து நாளேடுகளிலும் (2.10.2023) வண்ணமயமாக வெளிவந்திருப்பதை பார்த்திருப்பீர்கள்!**

திரைப்படங்களில் பாத்திரங்களுக்கு ஏற்ப நடிகர்கள் நடித்து நம்மை கவர்வதை பார்த்து மகிழ்ந்து பாராட்டியுள்ளோம். இவை திரைப்படங்களுக்காக நடிப்பது.

நிஜ வாழ்க்கையில் யாரும் நடிக்க முடியாது.ஆனால் அதுவும் முடியும். என்னால் தான் முடியும் என்று மாறு தட்டுகிறார் மாமன்னர் மோடி.

சிதறச் செய்த குப்பைகளை கூட்டுவது போன்ற ஓர் அற்புதக் காட்சியை படம் எடுத்து நாட்டு மக்களுக்கு போட்டுக் காண்பித்து இருக்கிறார் மோடி ஜி.

குப்பைகளை அகற்றி விடலாம். அத்தகைய பணிகளை நாடு முழுவதும் லட்சக்கணக்கான தூய்மைப் பணியாளர்கள் குறைந்த ஊதியத்தில் நாள்தோறும் சலிப்பின்றி மேற்கொண்டு வருகின்றனர்.

கொடிய கொரோனா உலகத்தையே அச்சுறுத்திய நிலையில் எவரும் வீட்டை விட்டு வெளியே வராமல் முகமூடி அணிந்து கொண்டும் அவ்வப்போது கைகளை சோப்பு போட்டு கழுவிக் கொண்டும், பாதுகாப்பாக வீட்டில் இருந்து கொண்டு தொலைக்காட்சியை சேனல் சேனலாக மாற்றிப் பார்த்து கொண்டிருந்த நிலையில்...

தன் உயிர் குறித்து எவ்வித கவலையும் இன்றி தெருத் தெருவாக, நாடு முழுமைக்கும் சுத்தம் செய்து சுகாதாரத்தை உறுதிப்படுத்தி பாதுகாத்த தூய்மை பணியாளர்களின் படங்கள் எந்த நாளேட்டிலும் வரவில்லை.

இப் பணிகளை மேற்கொண்ட அம்மகத்தான தியாகப் பணிகள் குறித்து எவரும் கவலைப்படவில்ல

வெள்ளப் பெருக்கெடுத்த போதும், பண்டிகை காலங்களில் குவியும் குப்பை, கூளங்களை அப்புறப்படுத்திட சகிக்க முடியாத துர்நாற்றத்தை பொருட்படுத்தாது , குனிந்து அள்ளி, கூடைகளில் சுமந்து வண்டிகளில் ஏற்றி, அந்த வாகனத்திலேயே பயணம் மேற்கொள்ளும் அத்தகைய அர்பணிப்பாளர்களுக்கு அலங்கார ஆடை இல்லை. சுவை மிக்க உணவு இல்லை. அவர்களின் புகைப்படங்கள் எதிலும் வருவதில்லை. புகைப்படம் எடுப்பதற்கு ஏற்ப போஸ் கொடுக்கும் பழக்கம் அவர்களுக்கு இல்லை.

ஆனால் மா மன்னர் துடைப்பம் எடுத்து கூட்டுகிற படத்தை பாருங்கள். அங்கே சிதறி கிடக்கின்ற தூய்மையான வெள்ளை காகிதத் துண்டுகளை கவனித்துப் பாருங்கள்.உண்மைகள் தெரியும்.

மா மன்னர் மோடியால் தனது மெய்யான தூய்மை அனைத்தையும் நாடு இழந்து நிற்கிறது.

இந்து, முஸ்லிம், கிறிஸ்துவர், சீக்கியர், பௌத்தர் என மத வேறுபாடுகள் இன்றி வெள்ளை ஏகாதிபத்தியமே வெளியேறு என்று ஒன்றுபட்டு ஓங்கி ஒலித்த குரல்கள் இன்று பிளவுபட்டு நாடு முழுவதும் பெரும் சுகாதாரக் கேடாய் உள்ளது.

"ஆயிரம் உண்டிங்கு சாதி – எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி?"

என்று முண்டாசு கவிஞன் ஓங்கி ஒலித்திட்டான்.

எச்சாதி ஆயினும் நாங்கள் எல்லோரும் ஒன்றாய் ஓங்கி ஒலிப்போம், வெள்ளை ஏகாதிபத்தியமே வெளியேறு !என்று உரக்க குரல் எழுப்பி போர்க்களம் கண்ட மக்கள் சாதியால் பிளக்கப்பட்டு, நாடு முழுவதும் சாதிச் சண்டை நாறும் குப்பையாகி நாட்டை அசுத்தப்படுத்தியுள்ளது.

4600 க்கும் மேற்பட்ட சாதிகளாம்! அதில் ஒரு சாதி பிரம்மாவின் நெற்றியில் இருந்து பிறந்ததாம். அந்த ஜாதிக்கு மற்ற அனைத்து சாதிகளுமே கீழ்படிந்தவர்களாம். அதுதான் சனாதனமாம்.

அதுதான் நாட்டின் தர்மத்தை பாதுகாப்பதாம். அதனை எதிர்த்தால் இந்துமத எதிரிகள் என மாமன்னரே வாய் கூசாமல் கூறி, நாட்டையே சனாதனம் என்கிற பெயரால் பெரும் கலவர குப்பையாக்கி நாட்டையே அசுத்தமாக்குகிறார்.

நாட்டின் செல்வம் எல்லாம் கொள்ளை கண்டு போயினர் வெள்ளையர். பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ, நாங்கள் சாகவோ" என பரங்கியர் ஆட்சிக்கு எதிராக பாடினார் பாரதியார்.

அவரைப் பாராட்டிப் பேசுவது போன்று பேசிக்கொண்டே, நாட்டின் செல்வங்கள் அனைத்தையும் இரு முதலாளிகளுக்கும், அந்நிய நாட்டு குபேரர்களுக்கும் வாரி வாரி வள்ளல் பெருமான் மாமன்னர் வழங்கியபடி உள்ளார்.



இவரின் இத்தகைய தேசத்துரோக நடவடிக்கையால் பொதுத் துறை நிறுவனங்கள் தனியாருக்கு தாரைவாக்கப்பட்டு இருப்பது மட்டுமல்ல, பொதுத்துறையில் பின்பற்றிய இட ஒதுக்கீடு இல்லாமல் செய்து பிற்பட்டோர், மிகப்பிற்பட்டோர், பட்டியல் இன மக்களின் வாழ்க்கை மேம்பாடு தடுக்கப்படுகிறது. சமூக ஏற்றத்தாழ்வுக் குப்பை நாடு முழுவதும் பெரும் சுகாதாரக் கேட்டை ஏற்படுத்தியுள்ளது.

காலங் காலமாக மறுக்கப்பட்ட கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்குரிய தடைகளை தகர்த்தெரிந்து, தற்போது அடித்தட்டு மக்களுக்கு கிடைத்து விடக் கூடிய கல்வி, வேலைவாய்ப்பை மறுக்கும் வண்ணமாக தேசியக் கல்வி கொள்கை மற்றும் குலக் கல்வி முறையை புகுத்தும் பெரும் குப்பை நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டு, பெரும் சுகாதாரக் கேட்டை ஏற்படுத்தியுள்ளது.

நாடு இந்தியா – பாகிஸ்தான் என்று பிளவு பட்டபோது, எங்களது தாய்நாடு இந்தியா தான் என ஓங்கி ஒலித்த இஸ்லாமிய பெருமக்கள், இன்று தங்களது தாய்நாட்டில் அச்சத்தோடு வாழும் அவலம் ஏற்பட்டது. சகிப்புத் தன்மை ஒழிக்கப்படுவதால் நிறைந்திட்ட குப்பைக் கூளமாய் மாறி பெரும் அச்ச சூழ்நிலை உருவாகியுள்ள சுகாதார பெருங்கேடு ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டம் நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள மகத்தான உரிமையான கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டு, மாற்றுக்கருத்து கூறினால் உயிருடன் இருக்க மாட்டாய் என கூச்சநாச்சம் இன்றி அச்சுறுத்தும் அலங்கோலம் நிறைந்த சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது.

சுதந்திர காற்றை சுவாசித்து சுதந்திரமாக செயல்பட்ட நீதிமன்றம், தேர்தல் ஆணையம், ரிசர்வ் வங்கி, வருமான வரித்துறை மற்றும் அமலாக்கத்துறை என அனைத்தும் தங்களின் சுதந்திரத்தை பறிகொடுத்து மாமன்னரின் உத்தரவுக்கு காத்திருக்க வேண்டிய அவலம் நிறைந்த சுகாதார கேடு ஏற்பட்டுள்ளது.

மதச் சார்பின்மை என்கிற மகத்தான கொள்கையை ஆழக் குழி தோண்டி புதைத்து விட்டு, அதன் மீது மனுதர்மம் எனும் மிக பிற்போக்குத்தனமான சாத்திரத்தை நிலை நாட்டும் அவலம் நிறைந்த சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது.

சாதிகள் தொடரவும், பெண் அடிமைத்தனம் கோலோச்சவும், சனாதான தர்மத்தை உரக்க கூறி மதம் என்கிற பெயரால் கலவரத்தை உருவாக்கி தங்களது மிகக் குறுகிய அற்பத்தனமான அரசியல் ஆதாயம் பெற்றிட நாட்டை வர்ணாசிரம சாக்கடைக்குள் முக்கி நாசமாக்கி வருகின்ற சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது

எந்த பொருளையும் விலை கொடுத்து வாங்க முடியாத அளவுக்கு விண்ணைத் தொடும் விலைவாசி உயர்வு உச்சத்தை தொட்டுள்ள மிகப்பெரும் கேடு ஏற்பட்டு, சாமானிய ஏழை, எளிய ,நடுத்தர மக்கள் படும் துன்ப துயரங்கள் என்ற சுகாதாரக் கேடு நாட்டை சூழ்ந்துள்ளது.

மணிப்பூர் என்கிற மணியான மாநிலம் கடந்த மே மூன்றாம் நாள் தொடங்கி இன்று வரை பற்றி எரிகிறது. இரட்டை எஞ்சின் ஆட்சியில் கலவர மாநிலம் என்று ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்டும் உள்ளது.

மாணவர்கள், மாணவிகள் கொல்லப்படுகின்றார்கள். சூரியன் உதித்து மறைகிறது . ஆனால் மணிப்பூரில் இரவு, பகல் வேறுபாடு இன்றி தீ சுவாலை கொழுந்து விட்டு எரிகிறது.

ஏழைகள் வீடுகள் எரிவது மட்டுமல்ல கிறித்துவ தேவாலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டு, அங்கே சுடுகாடாக்கப்படும் அவலம் நிறைந்த சுகாதாரக் கேடுகள் நிரம்பி வழிகின்றன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் மா மன்னர் ஆட்சியில் சிற்றரசுகள் ஆகிவிட்டன.

மாநிலங்கள் எல்லாம் டெல்லி பட்டணத்தில் உள்ள மாமன்னருக்கு மாதந்தோறும் தவறாமல் ஜி. எஸ். டி. என்ற கப்பம் கட்ட வேண்டும்.

மா மன்னர் விரும்பினால் கட்டிய கப்பத்தில் சிறிது கிள்ளிக் கொடுப்பார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளுக்கு எதிராக ஆளுநர் என்ற மாமன்னனின் அடியாள் போட்டி அரசாங்கம் நடத்தும் அவலம் நிறைந்திட்ட குப்பை நாட்டின் பல மாநிலங்களில் சுகாதாரக் கேட்டை ஏற்படுத்தியுள்ளது.

எண்ணிலடங்கா சுகாதாரக் கேட்டை சுத்தமாக துடைத்தெரிய வேண்டாமா?

நாட்டு மக்களே, நல்லவர்களே எடுங்கள் கையில் துடைப்பத்தை என்றுமில்லா சுகாதாரக் கேட்டால் நாடு மிக மோசமாய் பாதிக்கப்பட்டுள்ளது

கண்டும், காணாமலும் இருப்போமேயானால் ஏராளமான வியாதிகள் உருவாகும்.

**அத்தகைய வியாதிகள் தொடர்ந்தால், பரவினால் நாடு தாங்காது. தாமதிக்க வேண்டாம. துடைப்பத்தை எடுப்போம்!**

**நாட்டைப் பிடித்துள்ள சுகாதாரக் கேட்டை நீக்குவோம்!**

**நாம் கையில் எடுக்கும் துடைப்பம் நடிப்பதற்கல்ல. புகைப்படம் எடுத்திட, போஸ் கொடுப்பதற்கு அல்ல.**


**மாறாக சுத்தம் செய்ய, நாட்டை தூய்மையாக்க!**

**தூய்மை பணியை மேற்கொள்ள ஆயத்தமாவீர்! அணி திரள்வீர்!**

**ஆண் பெண் வேறுபாடு இன்றி ஆளுக்கு ஒரு துடைப்பத்தை தவறாது எடுப்பீர்! பணிபுரிவீர்!**

மீண்டும் சந்திப்போம்!

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# மக்களை துச்சமாகக் கருதி தயாராகும் அறிக்கை

## தொலை நோக்குகிறாராம் மோடி!



டி.எம்.மூர்த்தி

**பிரதமர் மோடி 2047 ஆம் ஆண்டு வரையிலான தொலைநோக்கு ஆவணம் (விஷன் டாக்குமெண்ட்) ஒன்றை டிசம்பரில் வெளியிடப் போகிறாராம். இதனை நிட்டி ஆயோக் தயாரிக்கிறதாம். எந்த வகையில் அந்த ஆவணம் தயாரிக்கப்படுகிறது என்பது குறித்து ஒரு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.**

செய்து முடித்ததும், இனி செய்ய வேண்டியதும் அந்த அறிக்கையில் அவதானிக்கப் பட்டுள்ளனவாம்.

அறிக்கையில் “முடிந்து விட்ட” விஷயங்களாகக் கூறப்படுபவை இவைதான்:

- **சென்ற நூற்றாண்டைச் சேர்ந்த உணவு உடை இருப்பிடம் ஆகிய பிரச்சினைகள் முற்றாக தீர்க்கப்பட்டு விட்டன.**
- **#வறுமையை ஒழிப்பதற்காக, சமூகநலம் பேணுவதற்காக ஏற்கனவே போடப்பட்ட அனைத்து திட்டங்களும் தமது நோக்கத்தை நிறைவேற்றி விட்டன.**
- **இந்தியாவின் அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு தரப்பட்டு விட்டது.**
- **குடிநீர் குழாய் இணைப்பும், எல்லா வீடுகளுக்கும் அடுத்த ஆண்டுக்குள் கொடுத்து முடிக்கப்படும்.**
- **ஆயுஷ்மான் பாரத் மூலம் மிகப்பெரும்பான்மை மக்களுக்கு மருத்துவ காப்பீடு வழங்கப்பட்டு விட்டது.**

எனவே இனி அடுத்த நூற்றாண்டுக்கான பிரச்சினைகளைக் கண்டறிந்து, அவற்றை எதிர் கொள்வதற்காக திட்டமிடுவதே தொலைநோக்கு ஆவணத்தின் அடிப்படை நோக்கம்.

### அவை என்ன திட்டங்கள் தெரியுமா?

- **துடிம கட்டமைப்பு (டிஜிட்டல் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்)**
- **போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பில் புதிய வழிநிலை**
- **பசுமை மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (ரினியூவபிள் எனர்ஜி)**
- **கல்வி மற்றும் மருத்துவத்தில் புதிய உயர்நிலை**
- **நாட்டின் எந்த இடத்தில் இருந்தும் 100 கிலோ மீட்டருக்குள் விரைவு நெடுஞ் சாலை**

### உணவு இப்போது பிரச்சினையே இல்லையா?

உணவு பாதுகாப்பின்மை என்றொரு சொல் உலகில் வலம் வருகிறது. அதன் பொருள் என்ன? தமது குடும்பத்துக்கு அடுத்த நாள் உணவு கிடைக்குமா என உறுதி செய்ய இயலாமல், அதன் காரணமாகவே தமக்கான உணவின் அளவையும் தரத்தையும் குறைத்துக் கொள்ளும் சூழலுக்கு பெயர்தான் உணவு பாதுகாப்பின்மை.


இதற்கான புள்ளி விவரங்கள் ஒவ்வொரு நாடுகளிலும் திரட்டப்படுகின்றன. ஆனால் 2014 முதல் 2023 வரை இது பற்றி இந்தியாவில் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களை மோடி அரசு வெளியிடவே இல்லை. ஆனாலும் ஐ.நா. சபையின் உறுப்பு நிறுவனங்களான யூனிசெப், வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைசேஷன் உள்ளிட்டவை இந்தியாவிலும் தரவுகளைத் திரட்டி உள்ளன.

அதன்படி இந்திய மக்களின் 56.36 கோடி மக்கள் (அதாவது 41%) போதிய ஊட்டச்சத்துள்ள உணவு இல்லாமல் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். உணவுப் பிரச்சினை தீர்ந்து விட்டது என்று அறிக்கை தயாரிக்கும் நிட்டி ஆயோக் கூட, மோடி ஆட்சியில் 13.5 கோடி மக்கள் வறுமை நிலையிலிருந்து மீண்டு விட்டதாகவும், ஆனாலும் 74.1% இந்திய மக்கள் ஆரோக்கியமான உணவுக்காக இன்னும் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்கிறது.

ஆக உணவு பிரச்சனை முற்றிலும் தீர்ந்து விட்டது என்று சொல்வது முழுப் பொய்.

### எல்லோருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைத்து விட்டதா?

முதலாவது ஐந்தாண்டு திட்டம் வகுக்கப்பட்ட 1951ம் ஆண்டில்,இந்தியாவில் ஒரு சதவீத கிராமங்கள் மட்டுமே குடிநீர் கிடைக்காத நிலையில் இருந்தன. ஆனால் ஏரிகளை அழித்தும், மழைக் காடுகளை மொட்டை அடித்தும், ஆற்று மணலை கொள்ளையடித்து அகற்றியும் நடத்தப்பட்ட கொடுஞ்செயல்களின் விளைவாக இப்போது 30 சதவீத கிராமங்களுக்கு குடிநீர் கிடைக்கவில்லை. 87 ஆயிரம் கிராமங்கள் மிகக் கொடூர தண்ணீர் நெருக்கடிக்கு ஆட்பட்டு உள்ளன. மேற்குவங்கம், பீகார், ஒடிசா என சில மாநிலங்களில் மட்டுமே இருந்த குடிநீர் பிரச்சினை இன்று இந்தியாவின் எல்லா மாநிலங்களுக்கும் பரவி விட்டது.



உள்ளாட்சி அமைப்புகள், விவசாயிகள், ஆய்வாளர்கள், நீர்த்தேக்கங்களின் பராமரிப்பில் பொதுமக்கள் ஆகியோரின் பங்களிப்பு முற்றிலுமாக அகற்றப்பட்டு, அனைத்தும் கார்ப்பரேட்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. இதனால் இயற்கையாக கிடைத்து வந்த குடிநீர் இப்போது கேன்களாகவும் பாட்டில்களாகவும் மாறி முற்றிலும் வணிகமயமாகிவிட்டது. இந்தியாவின் தண்ணீர் மனிதன் என்று அழைக்கப்படும் டாக்டர் ராஜேந்திர சிங், இந்திய மாநிலங்களின் குடிநீர் பற்றாக்குறையை பற்றி ஏராளமான தரவுகளை வெளியிட்டு இருக்கிறார்.

எனவே இந்தியாவின் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் கிடைத்துவிட்டது என்று சொல்வதும் வடிகட்டிய பொய்.

### வீடு இல்லாதவர்களே இல்லை என்பது சரியானதா?

அரசின் அனுமானம் முற்றிலும் பிழையானது என்பதை சாலையில் நடந்து சென்றாலே பார்க்க முடியும். அரசாங்கம் 1.7 லட்சம் பேருக்குத்தான் இந்தியாவில் வீடு இல்லை என்று ஒரு தரவை வெளியிட்டிருக்கிறது. அதுவுமே கூட உண்மை அல்ல. உலக அளவில் தரவுகளை திரட்டிய ‘குளோபல் டேட்டா’, இந்தியாவில் 30.24 கோடி குடும்பங்களுக்கு வீடு இல்லை; அது மட்டுமல்ல ஒவ்வொரு வருடமும் சராசரியாக 2% சதவீதம் இது அதிகரித்துச் செல்கிறது எனக் கூறுகிறது.

இருப்பிடம் என்பது தீர்ந்து விட்ட பிரச்சினை என்பது ஆதாரமே இல்லாத பெரும் பொய்!

### எல்லா வீடுகளுக்கும் மின் இணைப்பு தரப்பட்டு விட்டது என்பதாவது உண்மையா?

ஒரு கிராமத்துக்கு மின்சாரம் தரப்பட்டுள்ளது என்பதனாலேயே, எல்லா வீடுகளுக்கும் மின் இணைப்பு வந்துவிட்டது என்பது உண்மை அல்ல. ஒரு கிராமத்தில் 10% வீடுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டு விட்டாலே அது முழு மின் வசதி பெற்ற கிராமம் என்று அரசு பட்டியலிடுகிறது.

இந்தியாவில் 6 லட்சம் கிராமங்கள் உள்ளன. இதில் 14,700 கிராமங்களுக்கு இன்னும் மின்சாரம் சென்று சேரவில்லை. 2.5 கோடி வீடுகளுக்கு இன்னும் மின் இணைப்பு கிடைக்கவில்லை.

இந்திய வீடுகள் அனைத்துக்கும் மின் இணைப்பு கிடைத்து விட்டது என்று சொல்வது கலப்படமற்ற பொய்யாகும்.

**மக்களுடைய அத்தியாவசிய தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை என்பதை உணரும் அடிப்படை அறிவு கூட இல்லாமல், இவையெல்லாம் ஏற்கனவே முடிந்து போன சென்ற நூற்றாண்டின் பிரச்சனைகள் என்று முடிவுக்கு வரும் அரசாங்கத்தின் கொள்கைகள் மக்கள் விரோதமானவை.**

இவர்கள் வரையும் எதிர்கால திட்டங்களைப் பாருங்கள்.

டிஜிட்டல் என்பதற்கு ‘துடிமம்‘ என்று தமிழில் மொழியாக்கம் வந்துள்ளது அழகாகவும் பொருத்தமாகவும் தெரிகிறது.

துடிம உள்கட்டமைப்பு எனில், நவீன கேமராக்கள், சென்சார்கள், பிராட்பேண்ட், நெட்வொர்க், மொபைல், இணையதளங்கள், டிஜிட்டல் பண பரிவர்த்தனை, வாடிக்கையாளர் உறவு, மேலாளுகை மற்றும் அனைத்துப் பயன்பாடுகளுக்குமான தொழில்நுட்ப மென்பொருள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் கட்டமைப்புகள் என்று பொருள் கொள்ளலாம். இதன் இன்னொரு நீட்சியாக தகவல் தொழில்நுட்பத்தையும் வைக்கலாம்.

இந்த துடிம கட்டமைப்புகள் அனைத்தும் இந்தியாவில் அம்பானி, அதானி மற்றும் பன்னாட்டு பெரும் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு சொந்தமானவை. ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கான ரூபாய்களை அள்ளிக் குவிப்பவை.

அலைக்கற்றைகளை, இந்திய அரசு தனக்குச் சொந்தமான செயற்கைக் கோள்களில் இருந்து வழங்குகிறது. அம்பானியின் ரிலையன்ஸ் ஜியோ, மிட்டலின் ஏர்டெல், ஆதித்திய பிர்லாவின் ஐடியா ஆகிய அலைபேசி நிறுவனங்களுக்கு 5ஜி அலை வரிசைகளை வழங்கிய இந்திய அரசு, தனது சொந்த நிறுவனமான பிஎஸ்என்எல்க்கு 4ஜியைக் கூட வழங்கவில்லை. வந்தே பாரத்தை அதிவேக ரயில் என்று காண்பிக்க மற்ற ரயில்களின் வேகத்தைக் குறைத்தது போலத்தான் இதுவும்.

மரபு சாராத மின்சார உருவாக்கத்தில் பெரும் பங்கு வகிப்பவை சூரிய ஒளி தகடுகளும், காற்றாலைகளும் ஆகும்.

சோலார் செல் உற்பத்தியில் முதலிடத்தில் இருப்பவர் டாட்டா. மோடிக்கு நெருங்கிய சாமியாரான பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனமும் கூட முதல் 10 சோலார் மின்கல தயாரிப்பு நிறுவனங்களில் வந்துவிடுகிறது. காற்றாலைகளும் பெரும் கார்ப்பரேட்டுகளால் உருவாக்கப்படுபவை.

மருத்துவம், கல்வி ஆகியவை இப்போதே பெருமளவு வணிக மயமாக்கப்பட்டு விட்டன. இதை மேலும் தனியார் மயமாக்குவது, இவை இரண்டையும் சாதாரண மக்களின் கைக்கு எட்டாதவையாக மாற்றுவதிலேயே முடியும்.

விரைவு நெடுஞ்சாலைகளில் சுங்கச்சாவடிகள் மூலம் பணம் கொள்ளை அடிக்கப்படுவது பற்றி ஏற்கனவே சிஏஜி அறிக்கை தந்துவிட்டது. சாலை போடும் செலவை விட பல மடங்கு அதிகமான தொகை அள்ளிச் சுருட்டப்படுகிறது.

**மிக மையமான துறைகளான விவசாயம், வேலையின்மை ஆகியவற்றை இந்த அறிக்கையில் தொட்டுக் கூடப் பார்க்கப்படவில்லை.**

மூன்று வேளாண் சட்டங்களையும் நான்கு தொழிலாளர் சட்ட தொகுப்புகளையும் செயல்படுத்தினால், நிலமும் இந்தியர்களின் உழைப்பாற்றலும் முழுக்க கார்ப்பரேட்டுகளின் கட்டுப்பாட்டுக்கு கொண்டு செல்லப்படும்.

எனவே ஆர்.எஸ்.எஸ். – பி.ஜே.பி. அரசு பெரும் கார்ப்பரேட்டுகளை லட்சக்கணக்கான கோடிகளுக்கு அதிபர்கள் ஆக்குவதும், அதன் மூலம் இந்திய பொருளாதாரம் பெருமளவு மேம்பட்டு வருவது போல் காட்டுவதும், இந்திய மக்களின் அடிப்படைத் தேவைகளை கூட கவனம் செலுத்தாமல் அவையெல்லாம் முடிந்து போன விஷயங்கள் என்று புறம் தள்ளுவதுமே தொலைநோக்கு ஆவணம் ஆகும்.

ஆட்சி 2024 ஏப்ரல் மாதத்தோடு முடிந்து போனாலும், 2047 வரை திட்டங்களை விவரிப்பதற்கான காரணம் என்ன? 2014ல் தன்னை விட்டால் வேறு தலைவர் இல்லை என்று ஊதிப் பெருக்க வைத்து மக்கள் முன்பு பெரும் உருவமாய்க் காட்டியதைப் போல, இந்தத் தேர்தலிலும் மீண்டும் வெற்றி பெற செய்யுங்கள் என்று உள்நாட்டு வெளிநாட்டு கார்ப்பரேட்டுகளுக்கு விடுக்கப்படும் அழைப்பே இது!

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 27

# ஒப்பனைகள் அகன்று கோரமுகம் தெரிகிறது!

கோவையில் நடந்த ஊடக சந்திப்பின்போது பாஜக தலைவர் அண்ணாமலையிடம் 'நீங்கள் தலைவர் பதவியில் இல்லை என்றால் பாஜகவில் இருப்பீர்களா' என்ற கேள்வியை ஒரு பெண் பத்திரிக்கையாளர் எழுப்பினார். அதற்கு பொருத்தமான பதிலை அவர் கூறியிருக்கலாம்.

ஆனால் "கேள்வி கேட்பதற்கு என்று மரபு இருக்கிறது. அறிவாளித்தனமான இந்த கேள்வியை யார் கேட்கிறார்கள் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு தெரிய வேண்டும். வந்து என் பக்கத்தில் நில்லுங்கள்" என்று அண்ணாமலை அழைத்து இருக்கிறார். "மரபை தாண்டினால் அண்ணாமலை யாரா யிருந்தாலும் விடமாட்டான்" என பஞ்ச் டயலாக் வேறு!

"இந்த கேள்வி எந்த வகையிலும் அறம் தவறிய கேள்வியோ, ஒரு தனி நபரின் அந்தரங்க வாழ்க்கை குறித்த கேள்வியோ, ஒரு அரசியல் கட்சித் தலைவரின் குடும்ப விவகாரம் தொடர்பான கேள்வியோ, கேட்கவே கூடாத அல்லது கேட்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லாத கேள்வியோ கிடையாது" என்று பத்திரிக்கையாளர் சங்கம் சுட்டிக்காட்டி இருக்கிறது

அகங்காரம் தலைக்கேறிய ஆணவம், 'என்னை தட்டிக் கேட்க யார் இருக்கிறார்' என்ற முரட்டு துணிச்சல் அவரை இப்படி எல்லாம் பேச வைக்கிறது.

சென்ற ஆண்டு அக்டோபர் மாதத்திலும் பத்திரிகையாளர்களை பார்த்து "மரத்து மேல குரங்கு தாவுற மாதிரி எல்லாம் சுத்தி சுத்தி வர்றீங்க! நாய், பேய், சாராயம் விக்கிறவன் கேட்பதற்கெல்லாம் நான் பதில் சொல்லனுமா" என்று வினவினார்.

இக்கட்டான கேள்விகளை பத்திரிகையாளர்கள் வைத்தால் "நீங்கள் எல்லாம் அறிவாலய அடிமைகள்" என்பார்.

தனக்காக கேள்வி கேட்ட பத்திரிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கு பதிலாக, அவர்கள் பணியாற்றிய செய்தி நிறுவனங்கள் வேலையை விட்டு நீக்கியோ அல்லது அவர்களாகவே விலகிச் செல்லும் வகையில் சிறுமைப்படுத்தியோ வந்துள்ளனர். தமிழ்நாடு நன்கறிந்த பல ஊடகவியலாளர்களுக்கு இந்த கதி நேர்ந்தது. இதன் மூலம் அந்த செய்தி நிறுவனங்கள் தம்மை "கமலாலய அடிமைகள்" என்பதை நிரூபித்தன.

ஊடக நேர்மையைப் பாதுகாப்பதை விட, தமது சொத்துக்களையும் ஊடக வணிகத்தின் மூலம் ஈட்டும் பெரும் பொருளையும் பாதுகாப்பதே இந்த முதலாளிகளின் நோக்கமாக இருக்கிறது.

ஊடக அறத்தைக் காப்பதற்காக நின்றால், அமலாக்கத்துறை, வருமான வரித்துறை சேர்ந்து படையெடுக்கும். அல்லது பங்குச்சந்தை தகிடுதத்தங்களால் சொத்துக்களோடு அந்த ஊடகம் கார்ப்பரேட் முதலாளிகளால் கபளீகரம் செய்யப்படலாம். என்டிடிவிக்கு நேர்ந்த கதி எல்லோருக்கும் தெரியும்.

கெடுபிடிகளுக்கெல்லாம் அடிபணியாமல், மோடி அரசின் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தி வந்த "நியூஸ் க்ளிக்" செய்தி நிறுவனத்தின் மீது மோடி அரசு இப்போது பாயத் துவங்கி இருக்கிறது. அதில் பணிபுரிந்த பத்திரிக்கையாளர்கள், பணியாளர்கள் அனைவரது வீடுகளும் ரெய்டு செய்யப்பட்டுள்ளன.

"உன் மீது வன்முறை பயன்படுத்த உத்தரவோடு வந்திருக் கிறோம். பேசாமல் ஒத்துழை" என்று பெண் பத்திரிக்கையாளர்கள் உட்பட அனைவரும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களது தனிப்பட்ட விவரங்கள் குடும்பப் பின்னணி உட்பட விசாரிக்கப்பட்டுள்ளது. டெல்லியில் நடந்த விவசாயிகள் போராட்டம் பற்றிய கேள்வி பலமுறை தொடுக்கப்பட்டுள்ளது. அவர்களது கேமரா, மடிக்கணினி, எலக்ட்ரானிக் பொருட்கள், கார்கள் உட்பட அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாரம் யெச்சூரி வீட்டுக்குள்ளும் சோதனை செய்திருக்கிறார்கள். ஒரே நாளில் நிறுவனத்தை பூட்டி சீல் வைத்து விட்டார்கள். பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஏவப்பட்டிருக்கிறது.

"சந்தேகத்துக்குரிய" 37 ஆண்களையும் 9 பெண்களையும் விசாரித்து இருக்கிறோம் என்று டெல்லி காவல்துறை கூறுகிறது.

ஒரு இளம் பெண் பத்திரிக்கையாளர் "எனது எதிர்காலத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டி இருக்கிறது. ஏனென்றால் நேர்மையான பத்திரிகை செயல்பாடும், இந்த நாட்டு மக்களின், ஒடுக்கப்பட்ட சமூகங்களின் குரலை கவலைகளை பொதுவெளியில் தருவதும் இப்போது குற்றமாக்கப் பட்டுவிட்டது" என்கிறார்.

அமெரிக்காவிலிருந்து, சீனத் தொடர்புடைய நிதி உதவியை நியூஸ் கிளிக் பெறுகிறது என்று திடீரென "கண்டுபிடித்து" விட்டார்கள். அந்த செய்தியாளர்கள் மீது தேசத்துரோக வழக்கு போடுவது மட்டுமல்ல, இந்தக் கொடூர செயலை கண்டிப்பவர் எல்லோரையும் சீனாவின் ஏஜெண்டுகள், தேசத்துரோகிகள் என்று பொது வெளியில் கூசாமல் குற்றம் சாட்டுவதற்கான பின்புலத் தயாரிப்பே இது.


திரைகள் எல்லாம் கிழிந்து, பாசிச சக்திகளின் கோரமுகம் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி விட்டது. உலகின் எந்த நாட்டிலும் சர்வாதிகாரம் அதிக காலம் நீடித்ததில்லை!

# முதுநிலை மருத்துவக் கல்வி மாணவர் சேர்க்கை பிரச்சினைகளும் தீர்வுகளும் 2


ஜி.ஆர்.இரவீந்திரநாத்


ஏ.ஆர்.சாந்தி

கடந்த காலத்தில், மத்திய அரசு மருத்துவ கல்லூரிகளுக்கான தேசிய நுழைவுத் தேர்வுகள், CET-Common Entrance Tests என்ற பெயரில் நடைபட்டன. அவற்றில் டி.என்.பி போன்ற படிப்புகளுக்கு குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் கிமிமிவிஷி நுழைவுத் தேர்வில் கட் ஆஃப் மதிப்பெண் 50% என உள்ளது. அதை ரத்து செய்திட வேண்டும் என போராட்டங்கள் நடத்தப்பட்டன .



முறைகேடுகள், கட் ஆஃப் மதிப்பெண்ணாலோ, நுழைவுத் தேர்வாலோ உருவாகவில்லை. மாறாக, மாணவர் சேர்க்கைக்கு தனியாரை அனுமதிப்பதும்,கட்டணம் எவ்வளவு வேண்டுமென்றாலும் வசூலித்துக் கொள்ளலாம் என ஏற்கனவே இருந்த விசிமி விதிமுறைகளும், தற்போதைய தேசிய மருத்துவ ஆணையச் சட்டம் (NMC act 2019) போன்றவையே என்பதை உணரவேண்டும்.

## முதுநிலை மருத்துவப் படிப்புக்கு நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வேண்டுமா?

முதுநிலை மருத்துவப் படிப்பிற்கு, நுழைவுத்தேர்வுகளை ரத்து செய்ய முடியாது. அவ்வாறு ரத்து செய்ய வேண்டுமென யாரும் கோரவில்லை. எம்.பி.பி.எஸ் மதிப்பெண்களை கொண்டு முதுநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கையை தற்போதைய நிலைமைகளில் நடத்திட இயலாது. ஏனெனில், அத்தேர்வுகளில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. அகவய அடிப்படையில் மதிப்பெண் வழங்கப்படும் ஒரு தேர்வை போட்டித் தேர்வாக மாற்றுவது சரியல்ல. தனியார் பல்கலைக் கழகங்கள் தங்களது மாணவர்களுக்கு அதிக மதிப்பெண்களை வழங்கும். அதற்காக முறைகேடான பணத்தை பெறும். அத்தேர்வை மீண்டும் எழுதி இம்புரூவ்மெண்ட் செய்து கொள்ள முடியாது. தாங்கள் விரும்பும் இடங்களை மீண்டும் முயன்று பெறுவதற்கான வாய்ப்பை அது வழங்காது. எனவே, முதுநிலை மருத்துவப் படிப்புக்கு போட்டித் தேர்வு அவசியம்.

அதே போன்று தற்பொழுது ஒன்றிய அரசு திணிக்கும் நெக்ஸ்ட் தேர்வையும், போட்டித்தேர்வாக ஏற்க இயலாது. மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பட்டமேற்படிப்பு இடங்களுக்கு மாநில அரசே நுழைவுத்தேர்வை நடத்தும் நிலையை மீண்டும் கொண்டுவர வேண்டும். ஒன்றிய அரசின் இடங்களுக்கு ஒன்றிய அரசே ஒரு நுழைவுத்தேர்வை நடத்திட வேண்டும். அதில் தகுதி பெற,தேர்ச்சி பெற குறைந்த பட்ச மதிப்பெண்ணை நிர்ணயிக்கக் கூடாது. அதாவது நீட்டில் (NEET-National Entrance cum Eligibility Test) என்பதில் eligilibility யை நீக்கிவிட்டு அதை,தேசிய நுழைவுத் தேர்வாக (NET-National Entrance Test) மட்டுமே நடத்திட வேண்டும்.

## நுழைவுத் தேர்வு தரமான மருத்துவர்களின் தரத்தை உயர்த்துமா?

ஒரு நுழைவுத் தேர்வு மட்டுமே மருத்துவர்களின் தரத்தை உயர்த்தி விடாது. அது ஒரு இடத்தை பெறுவதற்கான போட்டித் தேர்வு மட்டுமே. ஒரு மருத்துவரின் திறமையை, தரத்தை, அறிவுசார் உழைப்பாற்றலை, அவருக்கு வழங்கப்படும் மருத்துவக் கல்வியின் தரம், திறமையை வளர்த்துக் கொள்வதற்கான தொடர் சுய முயற்சி, கூட்டு உழைப்பு, கூட்டுச் செயல்பாடு, படிப்பை முடித்த பிறகும் தனது திறனை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வளர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள், அதற்கான வாய்ப்புகள் ,புதிய அறிவியல் தொழில் நுட்ப விசயங்களை அறிந்து ,உள்வாங்கி உழைப்பாற்றலை மேம்படுத்திக்கொள்வது போன்றவற்றை சார்ந்ததாகும். இது ஓர் சமூக நடவடிக்கையாகும். மருத்துவம்,மற்றும் இதர அறிவியல் சார்ந்த சமூக ரீதியான உழைப்பு நடவடிக்கையால் உருவாவதாகும்.

கடந்த காலங்களில் முதுநிலை மருத்துவப் படிப்பு இடங்கள் காலியாகப் போவதை தடுக்க, முதுநிலை மருத்துவப் படிப்பிற்கு விண்ணப்பிக்காத அரசு மருத்துவர்களுக்கு கூட அந்த இடங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் திறமையான பேராசிரியர்களாகவே திகழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே,பூஜ்ஜியம் பர்சன்டைலாக நீட் கட் ஆஃப் மதிப்பெண்ணை குறைப்பதனாலேயே மருத்துவர்களின் தரம் பாதிக்கப்படும் என்பது தவறு.நுழைவுத் தேர்வில் ஒரு தகுதியை திணிக்க வேண்டும் என்பதே, மறைமுகமாக நுழைவுத் தேர்வை ஆதரிப்பதாகும்.

எனவே, ஒரு நுழைவுத்தேர்வே ஒரு மருத்துவரின் திறமையை தீர்மானித்துவிடும் என்பது மார்க்சிய அறிவுத் தோற்றவியலுக்கும், இயங்கியலுக்கும் எதிரானதாகும். ஒரு நுழைவுத்தேர்வு மட்டுமே ஒரு மருத்துவரின் திறமையை தீர்மானித்துவிடும் என்ற, அறிவுத் தோற்றவியல் பற்றிய இயக்க மறுப்பு, கருத்து முதல்வாதப்பார்வையை ஏற்கமுடியாது.

தொடர்புக்கு: 9940664343, 9444181955

## வினாடி - வினா

1 விண்வெளியில் மிதந்த முதல் அமெரிக்க வீரரின் பெயர்?

2 மனிதர்களை சுமந்து கொண்டு நிலவில் தரையிறங்கிய முதல் விண்வெளி ஊர்தி?

3 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திற்கான தீர்மானம் எந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது?

4 காந்தியின் தலைமையில் முதல் சத்தியாகிரகப் போராட்டம் எங்கு, எப்போது நடைபெற்றது?

5 மாப்ளா கிளர்ச்சி எந்த மாநிலத்தில், எந்த ஆண்டு தொடங்கியது?

6 இரும்பு துருப்பிடித்தலுக்கான வேதியியல் விளக்கம் என்ன?

விடைகள் 12 ஆம் பக்கம்



# 'பொய்கேசி' அண்ணாமலை அவிழ்த்து விட்ட புளுகுகள்!


இளசை கணேசன்

**சங்கிகள் தரவுகளை, ஆதாரங்களை சரியாகத் தேடிப் பெறுவதும் இல்லை; அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதும் இல்லை. காழ்ப்புணர்வுடன் அணுகியே தரந்தாழ்த்துவார்கள்.**

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் "தமிழர்கள் திராவிடர்கள் அல்லர்" என்று சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதாக, ம.பொ.சி. எழுதிய கட்டுரையை கோடிட்டுக் காட்டி நாடாளுமன்றத்தில் உண்மையை திரித்துப் பேசினார்.

சிலப்பதிகார வரிகள் எதனையும் நிர்மலா சீதாராமன் மேற்கோள் காட்டவில்லை. ம.பொ.சி கட்டுரையிலும் சிலப்பதிகார வரிகள் மேற்கோள் காட்டப்படவில்லை..

இதே போன்றுதான் தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை சமீபத்தில் சரியான தரவுகளோ ஆதாரங்களோ இல்லாத இரண்டு பொய்களை அவிழ்த்து விட்டுள்ளார்.

ஒன்று...

"1956 ஆம் ஆண்டு மதுரையில் நடந்த விழாவில் கடவுளை இழிவுபடுத்தி, பகுத்தறிவு கருத்துக்களை பேசிய அறிஞர் அண்ணாவை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கடுமையாக சாடினார். மன்னிப்பு கேட்காவிட்டால் மீனாட்சி அம்மனுக்கு பாலாபிஷேகம் செய்வதற்குப் பதில் ரத்தாபிஷேகம் நடக்கும் என தேவர் பெருமகனார் எச்சரித்தார். அதற்குப் பயந்து விழாவை நடத்திய பி.டி. ராஜனும் விழாவில் பேசிய அறிஞர் அண்ணாவும் ஒடி வந்து மன்னிப்பு கேட்டனர்"

– என்று உண்மையை திரித்துப் பேசி அண்ணாமலை சிக்கிக்கொண்டார்.

இரண்டு...

2023 செப்டம்பர் 10 அன்று மதுரையில் அண்ணாமலை பேசும்போது, "திருப்பாணாழ்வார் கோவிலுக்குச் சென்றால் அங்குள்ள நந்தியின் சிலை விலகி இருக்கிறது? கீழ் சாதியை சேர்ந்த ஒருவர் சிவனைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். அங்கிருந்தவர்கள் அனுமதிக்க மறுத்தனர். சிவனின் நந்தி சற்று விலகி அந்த மனிதர் சிவனைப் பார்க்க அனுமதித்தது. இதுதான் சனாதன தர்மம்."

என்று மற்றொரு பொய்யை அண்ணாமலை அவிழ்த்து விட்டுள்ளார்.

இந்த இரண்டு புருடாக்களுக்கும் அண்ணாமலை ஆதாரம் எதையும் மேற்கோள் காட்டவில்லை.

அறிஞர் அண்ணா பற்றிய அண்ணாமலையின் கூற்று தவறானது. அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அதிமுகவில் எதிர்ப்புக் குரல் எழுந்தது.

"நான் ஆதாரம் இல்லாமல் பேசவில்லை. தி இந்து ஆங்கில நாளிதழில் 1956 ஜூன் 1, 2, 3, 4 தேதிகளில் செய்தி வெளியாகி இருக்கிறது. தகுந்த ஆதாரத்துடன் தான் பேசினேன். எனவே மன்னிப்பு கேட்க மாட்டேன். பேசியதை வாபஸ் வாங்கவும் மாட்டேன்" என்று திமிராகப் பேசினார்.

அண்ணாமலைக்கு இருப்பது அதிகாரத் திமிர் மட்டுமல்ல. சங்கிகளுக்கே உரிய பச்சை அயோக்கியத்தனமும் சேர்ந்து இருக்கிறது.

பொய்யான தரவுகளை தாராளமாகவும், உண்மைத் தரவுகளை திரித்தும் பொய்களை அன்றாடம் அவிழ்த்து விடாமல் சூழ்ச்சிக்கார சங்கிகளால் இருக்க முடியாது. இதில், அண்ணாமலை முதலிடத்தில் இருக்கிறார். பொருத்தமான நூல்களை புரட்டி, தரவுகளைத் தேடி, ஆதாரங்களுடன் பேசும் வழக்கம் அண்ணாமலைக்கு அறவே இல்லை.

முகநூல்களில் சங்கிகள் பதிவிடும் செய்திகளையே ஆதாரங்களாகக் கொண்டு அண்ணாமலை அளந்து விடுகிறார்.

அறிஞர் அண்ணா குறித்து பேசியதில் அண்ணாமலை எதை மறைத்திருக்கிறார்? எதைத் திரித்திருக்கிறார்? எதை ஆதாயமாக்குகிறார்?

### 1956ல் நடந்தது என்ன?

மீனாட்சி அம்மன் கோவில், மேல ஆடி வீதியில் மதுரை தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழா நடந்தது. நிகழ்ச்சியில் சங்கப் பாடல் ஒன்றை சிறுமி மிகச் சிறப்பாக பாடினாள்.

அடுத்துப் பேச வந்த அறிஞர் அண்ணா, தனக்கே உரிய பாணியில் "இந்தச் சிறுமி சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட சங்கப் பாடலை மிகச் சிறப்பாகப் பாடினாள். இதைக் கூட பக்த சிரோன்மணிகள் உமையம்மையின் புனிதப் பாலை அருந்தியதால்தான் சிறுமியால் இப்படிப் பாட முடிந்தது என்று கூறி விடுவார்கள். நாம் இப்படிப்பட்ட புரட்டுகளில் இருந்து மீண்டு, உண்மை எது? என்பதை பகுத்தறிந்து தெளிவாகும் நிலைக்கு வந்து விட்டோம்" என்று பேசினார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்துப் பேசிய முத்துராமலிங்கத் தேவர், "மீனாட்சி அம்மன் கோவில் வளாகத்திலேயே நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் வகுப்புவாத அமைப்புகளின் சில தலைவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது எப்படி?, இது மீனாட்சியம்மன் ஆலயம். இங்கு தான் படித்த படிப்பை மறந்து, கட்சியின் தலைவர் என்ற தலைமைப் பண்பை மறந்து, தான் கொண்டிருந்த நாத்திகப் பண்பை மட்டும் மறக்காமல் பேசியவரை, இங்கு பேச விட்டது யார்? ஆலயத்தில் தெய்வ நிந்தனைப் பேச்சு நடந்தது நல்லதல்ல. இனி அவ்வாறு நடக்கக் கூடாது. விழா நிகழ்ச்சிகளை தமுக்கம் மைதானத்திற்கு மாற்ற வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

அதன்படி மறுநாள் விழா தமுக்கம் மைதானத்திற்கு மாற்றப்பட்டது.

தேவர் பேசும்போது யாருடைய பெயரையும், ஏசப்பட்ட பேச்சுகளின் பொருள்பற்றியும் விமர்சனம் செய்யவில்லை. யாரையும் மிரட்டவில்லை! யாருக்கும் எச்சரிக்கை விடவில்லை!

அண்ணாமலை காட்டும் ஆதாரமான 1956 ஜூன் 1, 2, 3, 4 தேதிகளில், அப்படி எந்தச் செய்தியும் தி இந்து நாளிதழ்களில் வெளியாகவில்லை.

முத்துராமலிங்கத் தேவர் தனது கண்டனத்தை பதிவு செய்திருக்கிறார். மிரட்டவோ எச்சரிக்கை விடவோ இல்லை.

அறிஞர் அண்ணாவும் பி.டி.ராஜனும் பயப்படவும் இல்லை. ஓடி வரவும் இல்லை. ஓடி வந்து மன்னிப்பு கேட்கவும் இல்லை!

மீனாட்சி அம்மனுக்கு பாலாபிஷேகம் செய்வதற்குப் பதில் ரத்தாபிஷேகம் நடக்கும் என்று தேவர் பேசியதாக குரல் பதிவோ எழுத்துப் பதிவோ இல்லவே இல்லை.

இது அண்ணாமலையின் திரித்தல். அப்பட்டமான பொய்.

அண்ணாமலையின் இந்த பேச்சு முத்துராமலிங்கத் தேவரை மறைமுகமாக வன்முறையாளராக சித்தரிப்பதாகும்.

தேவர் எதற்கும் பயப்படாத துணிச்சல்காரர். ஆனால் வன்முறையை விரும்பாதவர். இதை அண்ணாமலை மறைக்கிறார்.

அறிஞர் அண்ணாவுடன் மோத விரும்பினால், அவர் எழுதிய 'ஆரிய மாயை'யை எதிர்த்து அண்ணாமலை முழங்கலாமே!



இப்போது தேவரை அறிஞர் அண்ணாவுடன் ஏன் மோதவிட வேண்டும்? அண்ணாமலைக்கு இந்த அவசியம் ஏன் ஏற்பட்டது?

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்குலத்தோர் வாக்குகளை பெறுவதற்கான அண்ணாமலையின் சூழ்ச்சி என்பதைத் தவிர எதுவுமில்லை.

### நந்தி விலகி தரிசனம்

அடுத்து நந்தி விலகி தரிசனம் தந்தது பற்றிய அண்ணாமலையின் பேச்சு குறித்துப் பார்ப்போம்.

இசைக்குப் பெயர் பெற்ற பாணர் குலம், காலப்போக்கில் தீண்டாமைக்கு ஆளானது. இந்தப் பாணர் குலத்தில் பிறந்தவர்தான் திருப்பாணாழ்வார்.

திருமாலைப் போற்றி நாலாயிரம் திவ்ய பிரபந்தம் பாடிய 12 ஆழ்வார்களில், 11வது ஆழ்வார் திருப்பாணாழ்வார்.

தனது சாதி இழிவை நினைத்து திருவரங்கம் கோயிலுக்குள் நுழைய அஞ்சி, காவிரியின் மறுகரையில் நின்று 'பண்' (பாடல்) இசைத்து திருமாலை பாடினார்.

திருமாலுக்கு திருமஞ்சனம் செய்வதற்கு லோகசாரங்கர் என்னும் கோயில் பட்டர் நீர் எடுத்து வரும் போது, திருப்பாணாழ்வார் தன்னை மறந்து பாடிக்கொண்டிருக்கிறார்.

தீண்டாமை கருதி தள்ளி நிற்பதற்காக அவர் மீது கல்லை எரிகிறார்.. அந்தக் கல் திருப்பாணாழ்வார் மண்டையில் பட்டு குருதி வழிகிறது.

பாணரின் பக்தியை பட்டருக்கு உணர்த்த திருமால், ரத்தம் வழியும் தன் முகத்தைக் காட்டுகிறார்.

"நீ கல்லை எறிந்தது என் பக்தன் முகத்தில் அல்ல; எனது முகத்தில்" என்பதை உணர்த்தியதுடன், தனது பக்தனை தோலில் சுமந்து வருமாறு லோகசாரங்க பட்டருக்கு திருமால் ஆணையிடுகிறார்.

திருப்பாணாழ்வார் பற்றி கூறப்படுவது இதுதான். இது சனாதன தர்மத்துக்கு எதிரானது. சாதியப் பிளவையும் தீண்டாமையையும் ஏற்படுத்திய சனாதனத்தை நிராகரித்த, தமிழர்களின் வைணவ வழிபாட்டு நெறியாகும்

இந்த நிகழ்வு ஆழ்வார், பாணர் குலம், திருமால், வைணவம் திருவரங்கம் என்பதோடு தொடர்புடையது.

இதை திருப்பாணாழ்வார் கோயில், நந்தி, சிவன், சைவம் என்று அண்ணாமலை உளறிக் கொட்டுகிறார்.

திருநாங்கூர் கோவில் சீர்காழி அருகே இருக்கிறது. இது நாராயணப் பெருமாள் திருத்தலம். 108 வைணவ தலங்களில் இதுவும் ஒன்று.

திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்ற திருத்தலமாகும்.

இங்கும் நந்தி விலகி காட்சி தரும் நிகழ்வு எதுவும் நடக்கவில்லை.

திருப்பனந்தாள் திருத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. இங்குள்ள இறைவனின் திருப்பெயர் அருண ஜடேஸ்வரர். இவருக்கு செஞ்சடையப்பர் என்ற பெயர் உண்டு. இது நாயன்மார்கள் வழிபடும் தலமாகும்.

இங்கு தாடகை என்ற பெண்ணொருத்தி புத்திர வரம் வேண்டி இறைவனை தரிசிக்கச் சென்றாள். மலர்களை எடுத்தாள்; மாலை தொடுத்தாள். ஈசனுக்கு சார்த்த முற்படும் போது, இறைவன் இவரது பக்தியை சோதிக்க, அவளது மார்பகச் சேலையை நழுவச் செய்தான்.

ஐயோ நான் என்ன செய்வேன்! என்று நழுவிய சேலையை இரண்டு முழங்கைகளில் ஏந்திக் கொண்டு மாலையோடு நின்றாள். ஈசன் திருமுடி தாழ்த்தி பக்தையின் மாலையை பெற்றுக் கொண்டார்.

மாலையைப் பெற்றுக்கொண்ட இறைவன், ஒழுக்கம் கருதி குனிந்த தலை நிமிரவில்லை. யானை கட்டி இழுத்து பார்த்தார்கள், குனிந்த தலை நிமிரவில்லை. நாயன்மார்கள் இறைவன் திருநாமத்தைப் பாடிய பின்புதான் இறைவன் தலைநிமிர்ந்தார்.

இது திருப்பனந்தாள் தலத்தின் சிறப்பு. இதுவும் சனாதன நெறி அல்ல. சிவ வழிபாட்டின் சைவ நெறி.

சைவ, வைணவ நெறிகளை சனாதனத்திற்குள் அடக்க முடியாது. அதற்கும் சனாதனத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

நந்தியை விலகி இருக்கச் செய்து, சிவபெருமான் காட்சி தந்த இடம்...

திருப்பாணாழ்வார் கோவில் இல்லை.

திருநாங்கூர் கோவில் இல்லை.

திருப்பனந்தாள் திருத்தலம் இல்லை.

நந்தி விலகி காட்சி தந்த இடம் 'தில்லை'.

### நந்தனார்

புலையர் குலத்தில் பிறந்த நந்தனார், சைவ சமயத்தைச் சேர்ந்தவர். நாயன்மார்கள் வரிசையில் சேர்க்கப்பட்டவர். சிவனின் திருவடியைத் தவிர, மறந்தும் மற்றதை நினைவு கொள்ளாதவர். தில்லை சிவபெருமானை தடையின்றி நேரில் வழிபட வேண்டும் எனத் துடித்தவர்.

தன்னுடைய தீண்டாமை குலத்தை எண்ணி நாளை போவோம்! நாளை போவோம்! என்றே தள்ளிப் போட்டதால் திருநாளைப் போவார் என்றும் அழைக்கப்பட்டவர்.

பல்வேறு தடைகளைத் தாண்டி சிவபெருமானைத் தரிசித்த போது...

"சற்றே விலகியிரும் பிள்ளாய்" என்று நந்தியை விலகச் செய்து சிவபெருமான் நந்தனாருக்கு காட்சி தந்தார்.

இவை பற்றி எதுவும் தெரியாமல், சனாதனத்துக்கு முட்டுக் கொடுப்பதற்காக எதை எதையோ உளறிக்கொட்டுகிறார் அண்ணாமலை.

அவையெல்லாம் பொய்யும் புரட்டுகளாகவும் சனாதனம் விளைவித்த சாதிப் பாகுபாடு, தீண்டாமை, சமத்துவமின்மை என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகவும் இருக்கின்றன.

பொய்யைச் சொன்னாலும் பொருத்தமாகச் சொல்லுங்கள் அண்ணாமலை. பொய்யை மெய்யால் வெல்பவர்கள் தமிழர்கள்.

தொடர்புக்கு: 8220468816



பி.எஸ்.மாசிலாமணி

# தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் ரூ.1,759 கோடி கொள்ளை

## வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் தோல்வி!

**2022-23 ஆம் ஆண்டு சம்பா, தாளடி நெல் சாகுபடி காப்பீடு திட்டத்தின் மூலம் தனியார் கம்பெனிகள் விவசாயிகளை ஏமாற்றி மோசடி செய்து 1,759 கோடி ரூபாய் கொள்ளை அடித்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கொந்தளிப்பில் உள்ளனர்.**



கடந்த சம்பா தாளடி பருவத்தில் ஜனவரி இறுதி பிப்ரவரி மாதங்களில் அறுவடை ஆகும் நிலையில், பருவம் தவறி பொழிந்த பெருமழையால் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் நெற்கதிர்கள் மூழ்கி அழுகியது. பல பகுதிகளில் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் அதன்பின் ஆங்காங்கே போராட்டம் நடத்தி வந்த நிலையில், தமிழக அமைச்சர்கள் நேரில் வந்து பாதிப்பை ஆய்வு செய்து, தமிழக முதல்வரிடம் அறிக்கை அளித்தபடி, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்கியது.

ஒரு ஏக்கர் நெல் சாகுபடி மூலம் 40 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு கிடைக்கும். ஆனால் தமிழ்நாடு அரசு வழங்கியதோ ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் ரூ.5400 மட்டும். காப்பீட்டுத் திட்டம் மூலம் இந்த பாதிப்பிற்குரிய எஞ்சிய இழப்பீட்டுத் தொகை பின்னால் கிடைக்கும் என அப்போது அரசால் அறிவிக்கப்பட்ட நிலையில், விவசாயிகள் நம்பிக்கையுடன் இருந்தார்கள்.

இந்த நிலையில் கடந்த செப்டம்பர் 21 அன்று பயிர் பாதிப்புக்குள்ளான ஆறு லட்சம் விவசாயிகளின், 7 லட்சம் ஏக்கருக்கு காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ரூ. 560 கோடி இழப்பீடு வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் விடுத்துள்ள அறிவிப்பைக் கேட்டு விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர். இதனால் ஆங்காங்கே விவசாயிகள் போராட்டத்திற்கும் தயாராகி வருகின்றனர்.

ரிலையன்ஸ் பொது காப்பீட்டு நிறுவனம், அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்கள் தான் காப்பீட்டுத் திட்டத்தை இங்கு எடுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்த பருவத்திற்கான காப்பீடு திட்டத்தில் சாகுபடி பரப்பிற்கு ஏற்ப, விவசாயிகளின் பங்குத் தொகையாக 120 கோடி ரூபாய்; ஒன்றிய அரசின் பங்காக 874 கோடி ரூபாய்; தமிழ்நாடு அரசின் பங்காக 1325 கோடி என 2319 கோடி ரூபாய் காப்புத் தொகையாகப் பெற்றுள்ள இந்த நிறுவனங்கள், 8 மாதங்கள் கழித்து விவசாயிகளுக்கு வழங்குவதாக அறிவித்துள்ள தொகை ரூ 560 கோடி மட்டுமே. ஆக கடந்த சம்பா பருவத்தில் மட்டும் இந்த காப்பீட்டு நிறுவனங்கள் 1739 கோடி ரூபாய் கொள்ளை லாபம் அடைந்துள்ளன.

காப்பீட்டுத் திட்டம் என்றால், அனைத்து விவசாயிகளுக்கும் எல்லா ஆண்டுகளும் கிடைக்குமா? என்றுகூட உண்மையை அறியாதவர்கள் கூறுவர். இப்படித்தான் பெரும்பகுதி ஆண்டுகள் விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர். ஒரு சில ஆண்டுகளில் மட்டுமே ஓரளவிற்கு விவசாயிகளுக்கு இழப்பீடு கிடைத்துள்ளது. கடந்த சம்பா பருவத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு தமிழக அரசு நிவாரணம் வழங்கிய 95 சதம் விவசாயிகளுக்கே தற்போது இழப்பீடு இல்லை.

விவசாயிகளின் பயிர் இழப்பு பாதுகாப்பிற்காக அமல்படுத்திய காப்பீடு திட்டம், காப்பீட்டு நிறுவனங்கள் கொள்ளையடிக்கும் திட்டமாக மாறி விட்டது. இதை எதிர்த்து ஆதாரப்பூர்வமாக வாதிட இயலாத நிலையில், இந்த நிறுவனங்கள் கள அறுவடை சோதனை அளவை எழுத்துப்பூர்வமாக வைத்திருப்பர் என்பது கடந்த கால அனுபவமாகும்.

திட்டமிட்ட ஏமாற்றும் செயல் என்பது அறிவிக்கப்படும் வயலில் கள அறுவடை சோதனையின் போது, கள அலுவலர்கள் காப்பீட்டு நிறுவனங்களுக்கு துணை போவது, கள ஆய்வு செய்யவேண்டிய வயலில் அறுவடை முடிந்தபின் சென்று; வேறு சில முறைகளில் சோதனை கணக்கை எழுதுவது, உள்ளூர் விவசாயிகள் எவரையும் சோதனை களத்தில் அனுமதிக்காதது என்று காப்பீட்டு நிறுவனங்கள் லாபம் பெறும் நிலையில் பெரும்பகுதி சோதனை முடிந்துவிடும்.

கடந்த ஐந்து ஆண்டுகளின் மகசூலை அடிப்படையாகக் கொண்டு, நடப்பாண்டு மகசூல் குறைவுக்கு மட்டுமே இழப்பீடு என்பது சரியல்ல. டெல்டா மாவட்டங்களில் இயற்கை இடர்பாடுகள் கடந்த 15 ஆண்டுகளாக வறட்சி, புயல், வெள்ளம், பருவம் தவறிய மழை என ஒவ்வொரு ஆண்டும் நெல் மகசூல் குறைந்து வருகிறது. எனவே இந்த அடிப்படையை தவிர்த்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் மண் மற்றும் நீரைப் பொறுத்து பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நெல் உற்பத்தித் திறனை மூல அளவாகக் கொண்டு, குறையும் மகசூலுக்குரிய இழப்பீட்டை வழங்க வேண்டும். இத்துடன் தமிழக அரசே சில மாநிலங்களைப் போல் ஒன்றிய அரசின் பங்குத் தொகையுடன் காப்பீடு திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

எனவே தற்போது அறிவித்துள்ள காப்பீடு திட்ட இழப்பீட்டு அறிவிப்பை மறு ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் எவரும் விடுபடாமல் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். 33 சதத்திற்கும் மேல் பயிர் பாதிப்படைந்துள்ள விவசாயிகளுக்கு கடந்த சம்பா பாதிப்பிற்கு தமிழக அரசு நிவாரணம் வழங்கியதைக் கணக்கில் கொண்டு, இந்த ஆண்டு இழப்பீட்டை மறு ஆய்வு செய்து வழங்க வேண்டும்.

தொடர்புக்கு: 9443865101

# காவிரி தீர்ப்பை திசை மாற்றும்முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் கடிதம் குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் எதிர்ப்பு...!

காவிரி தீர்ப்பை திசை மாற்றும்முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் கடிதம் குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி எதிர்த்து விடுத்துள்ள அறிக்கை.

கர்நாடகத்தில் தற்போது உள்ள பயிர்களுக்கும் மற்றும் குடிநீருக்கும் 100 டிஎம்சிதண்ணீர்தேவைப்படுகிறது. 40 டி எம் சி தண்ணீரை தமிழகத்திற்கு திறந்துள்ள நிலையில் மேலும் கூடுதல் தண்ணீர் கேட்கும் தமிழகத்தின் அணுகுமுறை வருந்தக் கூடியதாகும். அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் தேசிய குடிநீர் கொள்கையின் படி கர்நாடகத்தின் குடிநீர் தேவைக்கு மட்டும்தான் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தமிழகம் மேலும் நீர் கேட்பது அநியாயமானது மட்டுமல்ல, இயற்கை நிலைக்கு எதிரானதாகும் என தேவகௌடா கூறியுள்ளார்.

மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பில் 12 டி.எம்.சி. மட்டுமே இனி திறந்து விடமுடியும். கர்நாடகத்தில் கபினி; மற்றும் கே.ஆர்.எஸ். அணைகளில் 52 சதம் நீர் உள்ளது. இதன் மேல் பகுதிகளில் உள்ள அணைகளில்உள்ள நீரையும்சேர்த்து கணக்கிட்டால் மேலும்கூடுதலாகும். இதையெல்லாம் மறைத்து விட்டு நீர் இருப்புகணக்கு வெளியிடப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள 23 மாவட்டங்களின் குடிநீர் தேவையும் காவிரி நீரால்தான் கிடைத்து வருகிறது என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.



உரிய மழை மற்றும் நீர் வரத்து இல்லாது காலங்களில், கொடுக்கப்பட்ட இறுதி தீர்ப்பின் சதவிகிதப் படி நீரை பங்கிட்டு கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டல் உச்சநீதிமன்ற தீர்ப்பில் உள்ளது. அதை கூட கொடுக்க மறுப்பது என்ன நியாயம்.. பற்றாக்குறை கால பங்கீடுபடி கூட தமிழகத்துக்கு தண்ணீர் கொடுக்க கொடுக்காத நிலையும்; காவேரி மேலாண்மை ஆணையம் கூடி உத்தரவிடும் தண்ணீரை கூட கர்நாடக அரசு திறந்து விட மறுப்பதும் தொடரும் நிலையில் தான் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் முறையிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி திறக்கப்பட்ட குறைந்தபட்ச தண்ணீரை கூட திறந்து விடக்கூடாது என தேவ கௌடாவின் மதசார்பற்ற கட்சிதலைவர்களும், கர்நாடகா பா.ஜ.க. தலைவர்களும் மற்றும் முன்னாள் முதல்வர்களும் பொதுமக்களை தூண்டி விட்டு தமிழகத்திற்கு எதிராக முழு அடைப்பு போராட்டங்களை நடத்துவதும் ..தமிழக முதல்வரை கண்டித்து போராடுவதும் என்ன நியாயம்? என்பதை இவர் உணர வேண்டும். இந்திய அரசியல் சட்டம் வழங்கி இருக்கிற நெறிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்ட அமைப்புகள் கொடுத்திருக்கிற தீர்ப்பை மறுதலித்து முன்னாள்முதல்வர்களும் கர்நாடக மாநில கட்சி தலைவர்களும் போராடுவது எந்த சட்ட வழிமுறை என்பதை முன்னாள் பிரதமர் கூற வேண்டும்.

மேலும் இவர் சில புதிய ஆலோசனைகளையும் கூறியிருக்கிறார். காவிரி நீர் பயன்பெறும் நான்கு மாநிலங்களுக்கு அப்பாற்பட்ட மாநிலங்களில் இருந்து ஒரு நிபுணர்கள் குழுவை அமைத்திட ஒன்றிய அரசு நீர்வளத்துறைக்கு உத்தர விட வேண்டுமாம். இந்த நிபுணர்கள் குழு கர்நாடகம்; தமிழ்நாடு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட மாநிலங்களில் நேரில் சென்று தண்ணீர் இருப்பு தேவை;பற்றாக்குறை; பயிர் நிலைமை; குடிநீர் தேவை எதிர்கால சூழல் இவைகளை ஆய்வு செய்து காவிரி மேலாண்மை ஆணையத்திடமும்; உச்ச நீதிமன்றத்திலும் தாக்கல் செய்திட வேண்டுமாம்.

இதனைஅடுத்து காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் ஒழுங்காற்று குழு நேரடியாக மேற்கண்ட அணைகளை எல்லாம் ஆய்வு செய்து உரிய தீர்ப்பையும் பரிந்துரையையும் வழங்கிடவேண்டும் என்ற ஒரு புதிய ஆலோசனையை செய்தியாளர்களிடம் கூறியுள்ளதுடன் ஒன்றிய பிரதமருக்கு இதற்கான உரிய நடவடிக்கை எடுத்திட 23.9.23அன்று இதை விளக்கி கடிதம் அனுப்பி உள்ளதாக கூறுகிறார்.

ஆக மொத்தம் எப்படியும் தமிழகத்திற்கு தண்ணீர் தருவதற்கு வாய்ப்பில்லை என்ற முடிவான கருத்தை கூறிவிட்டார். இதற்குள் இருக்கும் சூட்சமத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அரை நூற்றாண்டுக்கும் மேலான போராட்டங்களின் விளைவாய் கிடைத்ததுதான் காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற இறுதி தீர்ப்பு!. இதை மீண்டும் தொடங்கிய இடத்திற்கே கொண்டு போகும் முயற்சி தான் இது கருகும் பயிர்களை காப்பாற்ற தண்ணீர் கேட்டால், பயிரிட வேண்டிய சம்பாவுக்கு தண்ணீர் கேட்டால், குடிப்பதற்கு தண்ணீர் கேட்டால், கமிட்டி போட வேண்டுமாம்.

தமிழகம் பாலைவனம் ஆனால் என்ன! கர்நாடகம் செழித்தால் போதும் என நினைக்கும் முன்னாள் பிரதமரின் கர்நாடக பாசம் புரிகிறது. தமிழகத்தின் ஒப்புதல் இல்லாமல்உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டலும் இல்லாமல் காவிரி குறித்தான எந்த ஒரு புதிய குழுவையும் ஒன்றிய அரசு அமைத்திட அனுமதிக்க முடியாது. தமிழக விவசாயிகள் இதை ஏற்க மாட்டார்கள். இவ்வாறு பி. எஸ். மாசிலாமணி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## விவசாய தொழிலாளர்களின் விடிவெள்ளி

# பி.சீனிவாசராவ் 62ஆம் ஆண்டு நினைவு நாள்

விவசாய தொழிலாளர்களின் விடிவெள்ளி பி.சீனிவாசராவ் 62ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.

**திருத்துறைப்பூண்டி:** விவசாய தொழிலாளர்களின் விடிவெள்ளி, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைநாதம் பி.சீனிவாசராவ் அவர்களின் நினைவு தினம் தமிழ்நாடு முழுவதும் கடைபிடுக்கப்பட்டது.

பி. சீனிவாசராவ் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் திருத்துறைப்பூண்டி மற்றும் திருவாரூர் மாவட்டம் முழுவதும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு நடைபெற்ற நினைவு நாள் நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் பாலபாரதி ஆகியோரும் கலந்து கொண்டு பி.எஸ்.ஆர். நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். முன்னதாக காலையில் திருத்துறைப்பூண்டி காமராஜர் சிலை அருகில் பி.எஸ்.ஆரின் உருவப்படம் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாலையில் பி.எஸ்.ஆர் மணிமண்டபத்தில் அவரது உருவப்படத்திற்கு தலைவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்பு பி.எஸ். ஆர் அடக்கம் செய்யப்பட்ட முள்ளியாற்றுகரையில் அமைந்துள்ள அவருடைய சமாதியில் இரா.முத்தரசன் மற்றும் பாலபாரதி உள்ளிட்ட வருகை தந்த அனைத்து தலைவர்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்வில் பி எஸ் ஆர் அவர்களின் மூத்த மகளும், மருமகனும் கலந்து கொண்டனர். மாலையில் திருத்துறைப்பூண்டி தெற்கு வீதியில் எம்.மகாலிங்கம் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., தோழர் கே. உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ., கட்சியின் மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ், ஜி. சுந்தரமூர்த்தி மாவ.செயலாளர்(சிபிஎம்), க.மாரிமுத்து எம்.எல்.ஏ., அ.பாஸ்கர் மாநிலபொதுசெயலாளர்,வி.தொ.ச, பி வி சந்திரராமன், கே.ஆர். ஜோசப், கே. ராஜா, வி.ஜவஹர், டி.பி.சுந்தர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளையின் தலைவர்கள், தோழர்கள், அனைத்து தொழிற்சங்க தோழர்கள் இந்நினைவஞ்சலியில் கலந்துகொண்டனர். நிறைவாக புதுச்சேரி கலை குழுவின் சார்பில் வீராக்கி என்கின்ற நாட்டிய நாடகம் நடைபெற்றது. இந்நிகழ்வில் 2000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருத்துறைப்பூண்டி



தென்காசி

**பாலன் இல்லம்:** விடுதலைப் போராட்ட வீரரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், விவசாயத் தொழிலாளர்களின் புகழ்வாய்ந்த போராட்டங்களை முன்னெடுத்தவருமான பி.சீனிவாசராவ் நினைவு தினத்தில் கட்சி மாநில அலுவலகம் பாலன் இல்லத்தில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்யப்பட்டது.

நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா உட்பட மாநில அலுவலக ஊழியர்கள் பலரும் பங்கேற்றனர்.

**தென்காசி:** தென்காசி மாவட்ட குழு கூட்டம் தோழர் எஸ்.சிவசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது!

கூட்டத்திற்கு முன்னதாக பி சீனிவாசராவ் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எம்.லகுமையா, க . பாரதி , டி . இசக்கித்துரை, மாவட்ட துணைச் செயலாளர்எஸ்.வேலாயுதம், மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி . சுப்பையா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏ.பரமசிவன் உள்பட மாவட்ட குழு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்!

**நாமக்கல்:** பி.சீனிவாசராவ் நினைவு தினம் திருச்செங்கோடு நகர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில், நகர செயலாளர் எஸ்.சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.ஜெயராமன்,தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் , ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், வி.தொ.ச மாவட்ட பொறுப்பாளர் சி.ஜெயராமன் சிபிஐ ஒன்றிய செயலாளர் பி.எஸ்.முனுசாமி, சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் டி.கே.சுப்பிரமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி பேருந்து நிறுத்தத்தின் அருகில் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க நல்லம்பள்ளி ஒன்றியக்குழு சார்பில் 13 வதுமாநில மாநாட்டு தீர்மான விளக்கம் மற்றும் நல்லம்பள்ளி வட்டார விவசாய தொழிலாளர்களின் கோரிக்கை கூட்டமாக நடைபெற்றது. இதற்க்கு சங்க ஒன்றிய தலைவர் எல். சி. கிருஷ்ணன் தலைமைதாங்கினார். ஒன்றிய செயலாளர் என் .முருகேசன், ஒன்றிய பொருளாளர் ஆர். மல்லையன் முன்னிலை வகித்தனர். தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க மாநில செயலாளர்ஜெ. பிரதாபன், கூட்டத்தில் சங்க மாநில பொதுக்குழு உறுப்பினர் இ. அலமேலு, ஒன்றிய துணைச் செயலாளர்கள் வெ. பை. மாதையன் உள்ளிட்டஏராளமான விவசாய தொழிலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் கீழ ராஜவீதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற சீனிவாச ராவ் நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் முத்துஉத்ராபதி தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் சி.சந்திரகுமார், வெ.சேவையா,ஆர். பிரபாகர், தி.கோவிந்தராஜன், ஆர். பி. முத்துக்குமரன், ம.விஜயலட்சுமி,தமிழ்நாடு விவசாய சங்க தலைவர்கள் ஆர்.ராமச்சந்திரன், சோ. பாஸ்கர்,அ.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர்சி. பக்கிரிசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக சீனிவாசராவ் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

**செங்கல்பட்டு:** மதுராந்தகம் தொகுதி மெய்யூர் கிளையில், கிளை செயலாளர் செ.இன்பராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இளைஞர் பெருமன்றம் தொகுதி செயலாளர் எம்.நாகராஜ், இளைஞர் பெருமன்றம் கிளை தலைவர் கு.அய்யனார் மற்றும் கிளை தோழர்கள் எம். அஜய், ச.மணிகண்டன் கட்டிட தொழிலாளர் சங்க நிர்வாகி விஸ்வநாதன், தூய்மை பணியாளர் சங்க நிர்வாகி சொக்கம்மாள் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

# பழைய ஓய்வூதியத் திட்டம் கோரி டெல்லியில் குவிந்த 20 லட்சம் பேர்!

பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரி ஒன்றிய மாநில அரசு ஊழியர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்கள் நீண்ட நாட்களாகப் போராடி வருகின்றனர். ஆனால், ஒன்றிய பாஜக அரசு அதனை செயல்படுத்த மறுத்து வருகிறது. இந்நிலையில், பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கான தேசிய இயக்கம் *(National Movement for Old Pension Scheme - NMOPS)* அழைப்பு விடுத்ததை அடுத்து, அக்டோபர் ஒன்றாம் தேதி 20க்கும் மேற்பட்ட மாநிலங்களைச் சேர்ந்த ஒன்றிய மாநில அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்கள் என 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் டெல்லி ராம்லீலா மைதானத்தில் குவிந்தனர். அந்த மைதானமே மனிதத் தலைகளாக காட்சியளித்தது.

“ஓய்வூதிய மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துமாறு நாடு முழுவதும் பரப்புரை மேற்கொண்டு வருகிறோம். எங்களின் முயற்சியாலும், போராட்டத்தாலும் நான்கைந்து மாநிலங்களில் பழைய ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் ஒன்றிய அரசு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அங்கீகரித்தால், மாநில அரசுகளின் மீது சுமை விழாது என்று எங்கள் குழு நம்புகிறது; எனவேதான், பழைய ஓய்வூதியத் திட்டத்தை ஒன்றிய அரசே நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்திப் போராடுகிறோம்” என்று பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் விஜய்குமார் பந்து தெரிவித்தார்.

‘ஓய்வூதிய சங்கநாதப் பேரணி’ என்ற பெயரில், நாடு முழுவதும் 20க்கும் மேற்பட்ட மாநிலங்களிலிருந்து, ராம் லீலா மைதானத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் குவிந்தது மோடி அரசுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே, 20 லட்சம் பேர் திரண்ட இந்த பிரம்மாண்ட நிகழ்வை ஒரு சில ஆங்கில ஊடகங்கள் பிடிஐ, நேஷனல் ஹெரால்ட், இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற ஒரு சில ஆங்கில ஊடகங்கள் மட்டுமே செய்தியை வெளியிட்டன. ஆசியாவின் மிகப் பெரிய செய்தி நிறுவனம் என்று கூறிக்கொள்ளும் ஏஎன்ஐ *(ANI)* உட்பட மோடி அரசுக்கு ஆதரவான தேசிய ஊடகங்கள் எதுவும் சிறு செய்தியாக கூட இதனை வெளியிடவில்லை.

பழைய ஓய்வூதியக் கோரிக்கைக்கான இந்தப் போராட்டத்திற்கு காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள், ஆம் ஆத்மி ஆதரவு தெரிவித்திருந்தன. தலைவர்களும் பங்கேற்றனர்.



## தமிழ்நாடு முழுவதும்
# மாவீரன் பகத்சிங் பிறந்த நாள்



அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் சார்பில் மாவீரன் பகத்சிங் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முழுவதும் பகத்சிங் வாழ்வும் பணியும் புத்தக விற்பனை இயக்கம் நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் பஞ்சந்திருத்தியில் பகத்சிங் சிலைக்கு மாலை அணிவித்து புத்தக விற்பனை இயக்கத்திற்கு மாவட்டசெயலாளர் வி.பார்த்தீபன் தலைமை தாங்கினார். மாநில செயலாளர். க.பாரதி தொடங்கிவைத்தார். இதில் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர். திருவள்ளூர் மாவட்டத்தில் மாவட்டத்தில் நான்கு இடங்களில் நடைபெற்ற புத்தக விற்பனை இயக்கத்திற்கு மாவட்டசெயலாளர். பி.வி.செந்தில் தலைமை தாங்கினார்.

மத்தியசென்னை அம்பத்தூரில் மாவட்டசெயலாளர் எஸ்.ரமேஷ் தலைமையில் புத்தக விற்பனை இயக்கம் நடைபெற்றது.




சேலத்தில் மாவட்டத்துணைச்செயலாளர் எல்.சுரேஷ் தலைமையில் புத்தக விற்பனை இயக்கம் நடைபெற்றது.

மயிலாடுதுறையில் மாவட்ட செயலாளர் எம்.பிரபாகரன் தலைமையிலும், நாகையில் மாவட்டசெயலாளர் சந்திரமோகன் தலைமையிலும், புதுக்கோட்டையில் மாவட்டசெயலாளர் கு.ராஜேந்திரன் தலைமையிலும், திருச்சி மாநகரில் மாவட்டசெயலாளர். எம்.செல்வக்குமார் தலைமையிலும் , ஈரோடு தெற்கில் மாவட்டசெயலாளர். பிரபு தலைமையிலும், கரூர் நகரில் மாவட்டசெயலாளர் வி.லஷ்மிகாந்தன் தலைமையிலும், தேனியில் மாவட்டசெயலாளர் இரா.தமிழ்பெருமாள் தலைமையிலும், மதுரை புறநகரில் மாவட்டசெயலாளர் கே.கிருஷ்பாக்கியம் தலைமையிலும், மதுரை மாநகர்



மாவட்டசெயலாளர் பழனிமுருகன் தலைமையிலும், கோவையில் மாவட்டசெயலாளர். வே.வசந்தகுமார் தலைமையிலும், திருப்பூரில் மாவட்டசெயலாளர் ஆ.அரவிந்த்குமார் தலைமையிலும், நெல்லையில் மாவட்டசெயலாளர் சுரேஷ் தலைமையிலும், திருச்சி புறநகர் தமிழரசன் தலைமையிலும், தஞ்சை தெற்கில் மாவட்டசெயலாளர். கார்ல் மார்க்ஸ் தலைமையிலும், கள்ளக்குறிச்சியில் மாவட்டசெயலாளர், எஸ்.விஜய் தலைமையிலும், தூத்துக்குடியில் சுரேஷ் தலைமையிலும் புத்தக விற்பனை இயக்கம் நடைபெற்றது. முன்னதாக மாவீரன் பகத்சிங் படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

திருத்துறைப்பூண்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம், பி.எஸ்.ஆர் .இல்லத்தில் ஏஐஒய்எஃப் ஒன்றிய செயலாளர் கோ.சரவணன் தலைமையில், கட்சியின் நகர செயலாளர் டி.பி.சுந்தர் முன்னிலையில், ஒன்றிய செயலாளர் வி.ஜவஹர், பகத்சிங் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் கட்சியின் ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர் அ.குமரேசன், ஏஐஒய்எஃப் நாகை மாவட்ட தலைவர் மாரி உள்ளிட்டோர் கலந்துகொண்டு வீர வணக்கம் செலுத்தினர்.



# நடந்தா...
# சூழலியல் ...



அருண் நெடுஞ்செழியன்

**கர்நாடகம் தமிழ்நாடு இடையிலான காவிரி நதி நீர் பங்கீடு விவகாரம் தற்போது மீண்டும் தலைப்புச் செய்தியாகியுள்ளது. நடப்பாண்டில் ஆகஸ்ட் செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாட்டிற்கு 83 டிஎம்சி தண்ணீர் தரவேண்டிய கர்நாடக அரசு தற்போதுவரை 30 டிஎம்சி தண்ணீர் மட்டுமே தந்துள்ளது.**

காவிரியில் தண்ணீர் வரத்து குறைந்ததன் காரணமாக நடப்பாண்டில் தமிழகத்தில் சம்பா பயிர் சாகுபடியின் பாசனப் பரப்பு சுமார் 1.5 லட்சம் ஏக்கர் குறைந்துள்ளது. அதாவது சென்ற ஆண்டில் சுமார் 3.31 லட்சம் ஏக்கர் சாகுபடி ஆன நிலையில் நடப்பாண்டில் சுமார் 1.77 லட்சம் ஏக்கரில் மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது.

கர்நாடக அரசின் அணுகுமுறைக்கு எதிராக காவிரி நடுவர் மன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை முறையிட்ட தமிழ்நாடு அரசு, தமிழகத்தின் பங்கை உரிய நேரத்தில் வழங்கிட வலியுறுத்தி வருகிறது. மறுபக்கம் தமிழ்நாட்டிற்கு தண்ணீர் வழங்கக்கூடாது என கன்னட அமைப்புகள், பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கர்நாடக மாநிலம் முழுவதும் கடையடைப்பு பந்த் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், காவிரி நீர் பங்கீட்டில் தமிழ்நாட்டின் உரிமை குறித்து நாம் பேசும் அதேநேரத்தில், சூழலியல் கண்ணோட்டத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியின் காடுகளின் நிலைமை, மாறிவருகிற காலநிலை மாற்றப் போக்கிற்கும் மழைப் பொழிவு அளவின் மட்டத்திற்குமான தொடர்பு மற்றும் கர்நாடகம், தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளின் தேவைக்கு திருப்பி விடப்படுகிற காவிரி நீர், காவிரி ஆற்றுப் படுகையில் அரசு ஆதரவுடன் நடைபெறும் மணல் கொள்ளை போன்றவை குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையோர கூர்க் மாவட்டத்தில் தலைக்காவிரி என்ற இடத்தில் காவிரி உருவாகிறது. அங்கிருந்து சுமார் 800 கிலோ மீட்டர் பயணித்து, தமிழ்நாட்டின் பூம்புகாரில் கடலில் கலக்கிறது. இரு மாநிலங்கள் வழியாக காவிரி பாய்ந்து செல்கிற வழியை, பசுமைப் போர்வை போர்த்திய சோலையாக மாற்றுகிற காவிரியை “நடந்தாய் வாழி காவிரி” என இளங்கோவடிகள் பாடியதில் வியப்பில்லை!

காவிரி நீரால் கர்நாடக மாநிலத்தில் 18 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களும் தமிழ்நாட்டில் 25 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களும் பயனடைகின்றன. சுமார் 19 மாவட்டங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்கிறது.

### காவிரி நீர்ப்படிப்பு பகுதியில் குறைந்து வரும் பருவமழை

கர்நாடக மாநிலத்தில் நடப்பாண்டு ஜூன் முதல் செப்டம்பர்30 வரையிலான தென்மேற்குப் பருவமழை அளவு இயல்பை விட 25 விழுக்காடு குறைவாகப் பெய்துள்ளதை இந்திய வானிலை மையத்தின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இப்பருவத்தில் கர்நாடக மாநிலத்தில் வழக்கமாக 852 மிமீ பெய்யும் மழை அளவானது, இந்தாண்டு 642 மிமீ மட்டுமே பெய்துள்ளது. முதலில் ஜூன் மாதமே பற்றாக்குறையோடு தொடங்கிய



பருவமழை, ஜூலை மாதத்தில் வழக்கமாகப் பெய்கிற 271 மிமீ அளவைத் தாண்டி 348 மிமீ பெய்துள்ளது. மாறாக செப்டம்பர் மாதத்தில் 220 மிமீ பொழிகிற மழை நடப்பாண்டில் வெறும் 60 மிமீ அளவே பொழிந்துள்ளது.

இதனால் கர்நாடக மாநிலத்தின் சுமார் 195 தாலுகாக்களை வறட்சி பாதிக்கப்பட்ட பகுதியாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது. இந்தமழைபற்றாக்குறை நிலைமையானது கர்நாடகத்தின் முக்கிய அணைகளான கே.ஆர்.எஸ், ஹேமாவதி, நாராயனபுரா உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டத்தை சரியச் செய்துள்ளது. இந்த




காவிரி நதி

அணைகளின் நீர்மட்டமானது கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவில் கடுமையாக சரிந்துள்ளது.

கர்நாடகாவில் மட்டுமல்ல கேரள மாநிலத்திலும் கடந்த 123 ஆண்டுகளுக்குப் பிறகு தென்மேற்குப் பருவமழை குறைவாகப் பெய்துள்ளது. அம்மாநிலத்தில் இயல்பை விட நடப்பாண்டு 34 விழுக்காடு குறைவாக மழை பெய்துள்ளது. காவிரியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளின் நீர் இருப்பு நிலவரம் வருமாறு:

| அணை | மாநிலம் | முழு கொள்ளளவு (அடி ) | கடந்த ஆண்டு நீர் மட்ட அளவு (அடி) | நடப்பு ஆண்டு நீர் மட்ட அளவு (அடி) |
|---|---|---|---|---|
| மேட்டூர் | தமிழ்நாடு | 120 | 118.75 | 36.94 |
| கிருஷ்ணசாகர் | கர்நாடகா | 124.8 | 124.76 | 97.56 |
| கபினி | கர்நாடகா | 65 | 65 | 54.33 |
| ஹாரங்கி | கர்நாடகா | 129 | 126.57 | 123.89 |
| ஹேமாவதி | கர்நாடகா | 117 | 116.78 | 92.95 |

இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை பொய்க்கிற பருவமழை, தற்போது மிகப்பெரிய வேறுபாடுகளுடன் சில இடங்களில் மிகையாகவும் சில இடங்களில் மழையே இல்லாமலும் இருக்கிறது. காடழிப்பு மற்றும் தொழிற்சாலை கரிப்புகை வெளியேற்றமானது பூமி சூடேற்றத்தை அதிகரிக்க வைத்து பருவக்காற்றில் பெரும் மாறுதலை ஏற்படுத்தி வருவதை நாம் இனியும் அலட்சியப்படுத்த முடியாது.

### காபி பயிர் மற்றும் காடழிப்பு:

இன்று இந்தியாவின் காபிக்கொட்டை தயாரிப்பில் 70 விழுக்காடு கர்நாடகாவில் விளைகிறது. குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலையான குடகு சிக்மகளூர் பிராந்தியம் முழுவதும் காபி பயிரிடப்படுகிறது. காலனிய ஆட்சி காலத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையின் இயல்பான தாவரங்களை, மரங்களை அழித்து பணப் பயிர் சாகுபடியாக காபியை ஒற்றைப் பயிராக பயிரிட்டபோதே காவிரி நீர்ப்படிப்பு பகுதியான குடகில் அழிவு தொடங்கிவிட்டது.

சுதந்திர இந்தியாவிலோ மென்மேலும் காபிசாகுபடிக்காக வனங்கள் அழிக்கப்பட்டன. இயல் தாவரங்கள் மீண்டும் வளர்க்கப்படவில்லை. மனிதனின் பொருளாதார மையவாத நலனின் பேரால் இயற்கையை அழிப்பதே, இன்று வேறு வடிவில் மழைப் பற்றாக்குறையாக மனிதர்களையே பாதிக்கிறது. ஆனால் நமது ஆட்சியாளர்கள் இயற்கை சமநிலையை வசதியாக மறந்துவிடுகிறார்கள்.

### பெங்களூரு நகர் விரிவாக்கமும் திருப்பிவிடப்படும் காவிரி நீரும்:

இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத்துறை தலைநகராக பெங்களூரு நகரம் உள்ளது. தமிழ்நாடு, கேரளம் மற்றும் ஆந்திரா மட்டுமல்லாது வடநாட்டில் இருந்தும் ஏராளமான கணினிப் பொறியாளர்கள் பெங்களூரின் கணினித் துறையில் பெருமளவில் பணியாற்றி வருகின்றனர். பெங்களூரில் அதிகரிக்கும் மக்கள் தொகை பெருக்கம், நகர விரிவாக்கத்திற்கு வித்திடுவதோடு, குடிநீர் தேவை மற்றும் நிலப் பயன்பாட்டையும் அதிகரிக்க வைக்கிறது. எதையும் நீண்டகாலத் திட்டத்தோடு

# ப் வாழி காவிரி!

# நாக்கில் காவிரி சிக்கல்



செயல்படுத்த லாயக்கற்ற ஆட்சியாளர்கள் அப்போதைய பிரச்சனைக்கு உடனடி தீர்வு காணும் விதமாக காவிரி நீரை பெங்களூரு நகரத்திற்கான முக்கிய குடிநீர் ஆதாரமாக திருப்பிவிட்டார்கள். காவிரியை பெங்களூரு நகர குடிநீர் தேவையோடு இணைத்ததன் மூலம் நகர்ப்புற மக்களிடம் குடிநீர் தேவைக்கும் காவிரி நீர் இருப்புக்குமான அச்சத்தை உருவாக்கத் தொடங்கியது.

தமிழ்நாட்டிற்கு தண்ணீர் வழங்கினால், பெங்களூருவில் குடிக்கத் தண்ணீர் கிடைக்காது என அண்மையில் பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் தேஜஸ்வி சூர்யா செய்தியாளர் சந்திப்பில் கூறுகிறார். கர்நாடகாவில் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மண்ணைக் கவ்விய பாஜக, தற்போது காவிரி நீர் பங்கீட்டை முன்வைத்து இரண்டு தேசிய இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை கூர்மைப்படுத்தும் இனவாத அரசியலாக, மாநிலங்களுக்கு இடையிலான மோதலாக, இந்தியா கூட்டணிக்கு எதிரான பிளவுவாத அரசியலாக மாற்றுவதற்கு தீவிரமாக முயற்சித்து வருகிறது.

**மணல் கொள்ளை:**

அண்மைக் காலங்களில் ஆற்று மணல் அள்ளுவதற்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக புதிய புதிய இடங்களில் மணல் குவாரி அறிவிப்புகள் வந்துகொண்டிருக்கின்றன. தமிழகத்தில் காவிரி, தென்பெண்ணை, பாலாறு உள்ளிட்ட ஆறுகளில் 25 இடங்களில் புதிதாக மணல் குவாரிகளைத் திறக்க தமிழ்நாடு அரசு அனுமதித்திருப்பது சூழலியலாளர்கள் மற்றும் மக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதுவும் தற்போது கனரக எந்திரங்களின் துணையுடன் மணல் அள்ள அனுமதித்திருப்பது குவாரி மாஃபியாக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதில் 11 குவாரிகள், கொள்ளிடம் ஆற்றில் மட்டுமே வரவிருப்பது குறிப்பிடத்தக்கது. அரசின் இந்த முடிவுக்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஆற்றுப் படுகையில் மூன்றடி ஆழத்துக்கு மட்டுமே மணல் அள்ள வேண்டும் என அரசு விதிமுறை வகுத்திருந்தாலும், முப்பது அடி ஆழம் வரை மணல் எடுப்பது எழுதப்படாத விதிமுறையாக உள்ளது. இந்த முறைகேடுகளுக்கு எதிராக மக்கள் யாரேனும் குரல் கொடுத்தால், அவர்களின் குரல்வளையை நெரிப்பதற்கு குவாரி மாஃபியா கும்பல் தயங்குவதில்லை.

ஆற்று மணல் இயற்கையின் கொடை. அதை மனிதனால் உற்பத்தி செய்ய முடியாது. ஆற்று நீரை தனது மடியில் பஞ்சு போல தேக்கி வைத்து நிலத்தடி நீர்மட்டம் குறையவிடாமல் பாதுகாப்பதில் ஆற்று மணலின் பங்கு முதன்மையானது. இந்த மண்ணைத் தோண்டி அகற்றிவிட்டால், நீர் சேமிப்பு அமைப்பே அழிந்துவிடும். இறுதியில் ஆறுகளின் மரணத்திற்கு வித்திடும். விவசாயம் பாழாகும். சோலைவனம் பாலைவனம் ஆகும். குடிநீர் பற்றாக்குறை ஏற்படும்

**மேக்கேதாட்டு அணை கட்டுமானம் வெந்த புண்ணில் வேல் பாய்சுகிற கர்நாடகம்**

பருவம் தப்பி பெய்கிற மழை, காடழிப்பு மற்றும் மணல் கொள்ளை ஒருபக்கம் காவிரியை கொலை செய்துகொண்டிருக்க; மறுபக்கம் காவிரியின் குறுக்கே மேகேதாட்டு என்ற பகுதியில் புதிதாக அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சியானது நிலைமையை மேலும் மோசமாக்கி காவிரி நீரை தமிழ்நாட்டிற்கே வரவிடாமல் தடுத்துவிடும்.

கர்நாடக எல்லைக்குள் சுமார் 320 கிமீ ஓடும் காவிரியின் குறுக்கே நான்கு பெரும் அணைகள் கட்டியுள்ள கர்நாடக அரசு, பெரும்பாலும் இந்த அணைகளின் வழியே, மேட்டூருக்கு உபரி நீரை மட்டுமே திறந்துவிடுகிறது. கர்நாடகா தரப்பிலிருந்து, காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படியான, நீர் பங்கீடு என்பது அத்தி பூத்தாற் போல் என்றாவது கர்நாடகா நடைமுறைப்படுத்துவது வழக்கமாகி விட்டது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியை முறையாக காப்பாற்றவில்லை எனில் காவிரி பாசனத்தை நம்பியுள்ள அனைத்து மாநில மக்களின் நிலை அதோ கதிதான் என்பதே எதார்த்த உண்மை. மேலும் கர்நாடக மாநிலத்தின் கபினி அணையில் இருந்து வரும் உபரி நீரும், கிருஷ்ணசாகர் அணையில் இருந்தும் வரும் உபரி நீரும் ஒன்றுகலந்துதான் மேகேதாட்டு வழியாக மேட்டூர் வந்தடைகிறது. இவ்வாறு வருவதால்தான் 93 டிஎம்சி கொள்ளளவில் மேட்டூர் அணையில் நீர் தேக்கப்பட்டு, கல்லணை வழியாக காவிரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய் வழியே காவிரி டெல்டாவிற்கு நீர் விநியோகிக்கப்படுகிறது.

ஆக, தமிழகத்திற்கு காவிரி நீர்வரத்தின் தொடக்கப் புள்ளியான மேட்டூர் அணையில், நீர் வரத்து குறையுமானால், ஒட்டுமொத்த காவிரி டெல்டாவிற்கும் நீர் கிடைக்காது. கிருஷ்ணசாகர் நீரும், கபினி நீரும் சேர்ந்து தமிழ்நாட்டை நோக்கி ஓடிவரும் காவிரியின் குறுக்கே ஆடு தாண்டுகிற அகலத்தில் (மேக்கா ஆடு, தாடு தாண்டு) குறுகலாகிற காவிரியின் குறுக்கே அணை கட்டி தமிழகத்திற்கு வருகிற நீரை கர்நாடக அரசு தடுத்துவிட்டால், தமிழக காவிரி டெல்டாவே சீர்குலையும்.

ஒருபுறம் உலகமயம், தாராளமயம், தனியார் மயத்தின் வன்முறை; மறுபுறம் முழுமை பெறாத நிலச் சீர்திருத்தத்தங்களால் உற்பத்தியைப் பெருக்க முடியாத அவல நிலை என காவிரிப் பாசன விவசாயிகள இருபக்கமும் இடி வாங்கி வரும் நிலையில் காவிரி நீரும் பொய்த்தால் என்னாவது?

90களுக்கு பின்பு விவசாய உற்பத்தி பொருளின் வீழ்ச்சி, பாசன வசதிகளின் பராமரிப்பின்மை என்ற சிக்கல்களும் சேர்ந்து கொள்ள, இதோடு காடழிப்பு, காலநிலை மாற்றத்தால் பருவம் தப்பிய பருவமழையும் கூடுதல் காரணியாக சேர்ந்துகொள்ள, ஒட்டுமொத்த கிராமப் பொருளாதாரமும் இன்று பெரும் சீர்குலைவை நோக்கி சென்றுகொண்டுள்ளது.

தற்போது தமிழக கிராமங்கள் வேகமாக காலியாகி வருகின்றன. கிராமத்தில் எஞ்சி இருப்பவர்களும் உயிரற்ற உடல்களாக அங்கு அலைந்துகொண்டுள்ளனர். நகரங்களில் மக்கள் நிரம்பி வழிகின்றனர். ஒரு ஏக்கர், அரை ஏக்கர் வைத்துள்ள விவசாயிகள் தினக் கூலிகளாக நகரத்தில் அலைந்து திரிகின்றனர். கிராமத்திற்கும் நகரத்திற்குமான முரண்பாடு மீட்கமுடியாத எல்லைக்கு சென்றுகொண்டுள்ளது. கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் இந்தப் போக்கு தீவிரம் பெற்றுள்ளது.

இந்த சூழலில் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல காவிரியின் குறுக்கே அணைக் கட்டுவதும், காவிரி நீர் வரத்து குறைவதும் காவிரி பாசன விவசாயிகளை இடிபோல தாக்கியுள்ளது.

காவிரி என்பது ஓடிவருகிற ஆறு மட்டுமல்ல, அது பல ஆயிரம் ஆண்டுகளாக மக்களுடன் ஒன்றுகலந்துள்ள ஜீவன்; உயிர். காவிரி ஆற்றங்கரையோரம் தழைத்த மக்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல, அம்மக்களின் பண்பாட்டிற்கும் ஆதாரம். அது அழிக்கப்பட்டு விடுமா?

தொடர்புக்கு: 9842391963

## வணிக சமையல் எரிவாயு விலை உயர்வு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்**



வணிக சமையல் எரிவாயு விலை உயர்வுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பாஜக ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் எண்ணெய் நிறுவனங்கள் வணிக வகை சமையல் எரிவாயு சிலிண்டர் விலையில் 209 ரூபாய் உயர்த்தியுள்ளது. இதன் காரணமாக 19 கிலோ எடையுள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை ரூ.1898/ ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதம் சிலிண்டர் விலையில் ரூ.200 குறைக்கப்பட்டதாக ஆரவார முழக்கம் செய்தனர். ஆனால், தற்போது வணிக நிறுவனங்கள் ஆகஸ்டு மாதம் கொடுத்த விலையைவிட சிலிண்டருக்கு ரூ.46 அதிகம் தரவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த விலை உயர்வு தேநீர் கடைகள், உணவகங்கள், தெருவோர வணிகம் என பல பிரிவினரையும் கடுமைப் பாதிப்பதுடன், இதன் வழி சேவை பெறும் பொதுமக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலாகும். விலை குறைப்பு செய்தது போல் நாடகமாடி, முன்னிலும் அதிகமான விலை ஏற்றி மக்களை வஞ்சித்து வரும் ஒன்றிய அரசின் மக்கள் விரோத செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிப்பதுடன், உயர்த்தப்பட்ட விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

## போராடும் ஆசிரியர்களிடம் பேச்சு நடத்த வேண்டும்

**மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிக்கை**

போராடும் ஆசிரியர்களை தமிழ்நாடு அரசு அழைத்துப் பேச்சு நடத்த வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழகத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில், இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணிக்கு கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் (RTEAct–2009) படி கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் ஆசிரியர் தகுதித் தேர்வு, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வருகிறது. 2012 ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்ற அனைவருக்கும் ஆசிரியர் பணி வழங்கப்பட்டது. ஆனால் கடந்த 2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணிநியமனம் செய்வதற்காக வெயிட்டேஜ் மதிப்பெண் முறை (அரசாணை எண்.71) பின்பற்றப்பட்டது.

எனவே ஆசிரியர் பணி நியமனத்தில் கொண்டு வரப்பட்ட வெயிட்டேஜ் என்ற தகுதிக்காண மதிப்பெண் முறையால் பல்வேறுபட்டக் கிராமப்புற மற்றும் முதல் தலைமுறை பட்டதாரிகள் பணிவாய்ப்பை இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர். அதன்பிறகு கடந்த 2018 ஆம் ஆண்டு தமிழக அரசே முற்றிலும் இந்த வெயிட்டேஜ் முறையை நீக்கிவிட்டு தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மீண்டும் ஒரு பணிநியமன போட்டித் தேர்வு என்ற அரசாணை 149ஐ வெளியிட்டது.

ஒரு தேர்வில் தேர்ச்சி பெற்று சான்றிதழ் முடித்தவர்களில் பாதிப்பேர் ஏறக்குறைய 24,000 ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்ட நிலையில், 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீதமுள்ளவர்களுக்கு மட்டும் மற்றுமொரு போட்டித் தேர்வு என்பது முற்றிலும் முரண்பாடாக இருப்பதால், 2013 ஆம் ஆண்டு தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களை மறுநியமனப் போட்டித் தேர்விலிருந்து விலக்கு அளிக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை அழைத்து பேசி சுமூக தீர்வுக்கு அரசு முயலவேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் தெரிவித்துக் கொள்வதாக கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

# அமைப்புசாராத் தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக திரட்ட உறுதியேற்போம்

## ஏ.ஐ.டி.யு.சி. பொதுக்குழுவில் தீர்மானம்






**ஏ.ஐ.டி.யு.சி. யின் தேசிய பொதுக்குழு கூட்டம் கடந்த 22, 23, 24 ஆகிய தேதிகளில் திருப்பூரில் ராமசாமி முத்தம்மாள் திருமண மண்டபத்தில், ஏஐடியூசி தலைவர் ரமேந்திர குமார் தலைமையில் நடைபெற்றது.**

இந்த பொதுக்குழுவில் ஏஐடியுசி யின் 103 வது ஆண்டில் "அமைப்புசாராத் தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக திரட்ட உறுதியேற்போம்" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள்.

1. தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கும் நோக்கோடு தொடங்கப்பட்டுள்ள இந்தியா கூட்டணியை ஏ ஐ டி யு சி ஆதரிக்கிறது. நரேந்திர மோடி தலைமையிலான அரசை ஆட்சியில் இருந்து தூக்கி எறிய வேண்டும். பாஜக அரசு மக்கள் விரோத, தொழிலாளர் விரோத மற்றும் விவசாயிகள் விரோத அரசு ஆகும்.

2. பாஜக அரசு அரசியல் ஆதாயங்களுக்காக மக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியை செய்து வருகிறது. வேலையில்லா திண்டாட்டம், பிராந்தியவாதம், மதவாதம் மற்றும் சாதிபேதம் போன்ற அடிப்படை வாதம் கண்ணோட்டத்துடன் நாட்டு மக்களை பிரித்து வைப்பது கவலைக்குரியதாகும்.

3. நாட்டில் பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ரூபாயின் மதிப்பு சரிந்து வருகிறது. அத்தியாவசிய பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகிறது. 2014 தேர்தலின் போது ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என பாஜக வாக்குறுதி அளித்தது. அதை அது முற்றிலுமாக மறந்துவிட்டது. கடந்த 9 ஆண்டுகளில் பல துறைகளை சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் வேலை இழந்துள்ளனர். அரசுத் துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 16 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

4. இந்தியா கூட்டணியிடமிருந்து நாட்டு மக்கள் அதிகம் எதிர்பார்க்கிறார்கள் என்று ஏ.ஐ.டி.யூ.சி. பொதுக்குழு உறுதியாக கருதுகிறது. குறிப்பாக நாட்டு மக்களை ஒரே மாதிரியாக வழிநடத்தவும், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்யவும், மதம், சாதி, மொழி, பிரதேசங்கள், போன்ற சமூக வேறுபாடு இன்றி அனைத்து குடிமக்களையும் பாதுகாக்கவும், மக்கள் அமைதியாகவும், நல்லிணக்கத்துடனும் வாழவும் இந்த "இந்தியா" கூட்டணி வழிவகுக்கும் என்றும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

5. தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் 100 வருடங்கள் போராடிப் பெற்ற உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்து நான்கு கார்ப்பரேட் ஆதரவு சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள தொழிலாளர் விரோத சட்டங்களை புதிய அரசு திரும்ப பெற வேண்டும்.

6. பிரதமர் தலைமையில் நடத்தப்பட்டு வந்த இந்திய தொழிலாளர் மாநாடு 2015ம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இது உடனடியாக மீட்டெடுக்க வேண்டும். எதிர்காலத்தில் பிரதமராக வருபவர் தொழிலாளர்களின் பிரச்சினைகளைக் கேட்டு அவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பவராக இருக்க வேண்டும்.

7. தொழிலாளர் அமைச்சர் மற்றும் பிற அமைச்சர்கள் தொழிலாளர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அரசு எந்த ஒரு குறிப்பிட்ட தொழிற்சங்கத்திற்கும் ஆதரவாக இல்லாமல் இரு தரப்பு மற்றும் முத்தரப்பு அமைப்புகளிலும் விகிதாச்சார அடிப்படையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.

8. சர்வதேச தொழிலாளர் தர நிலைகள் மற்றும் ஐஎல்ஓ-வில் அங்கீகரிக்கப்பட்ட உடன்படிக்கைகள் மதிக்கப்பட வேண்டும்.

9. வங்கிகள், பொதுக் காப்பீடு, எல்.ஐ.சி. பெல், நிலக்கரி, எண்ணெய், மின்சாரம், சாலை போக்குவரத்து, விமானம், துறை முகங்கள் உள்ளிட்ட அனைத்து பொது துறைகளையும் தனியார் மயமாக்குவது நிறுத்தப்பட்டு, பொதுமக்களின் சொத்தான பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான மற்றும் மேம்படுத்துவதற்கான முறையில் தொழிற்சங்கங்களுடன் ஆலோசனையை தொடங்க வேண்டும்.

10. ஆயுத தொழிற்சாலை பணிகளை அனுபவமற்ற தனியார் நிறுவனங்களுக்கு வழங்காமல், அரசே ஏற்று நடத்த வேண்டும்.

11. டி.ஆர்.டி.ஓ. வை மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவை திரும்ப பெற வேண்டும். ராமராவ் கமிட்டிக்கு ஏஐடிஇப் வழங்கிய முன்மொழிவை செயல்படுத்த வேண்டும்.

12. ரயில்வே துறையின் செயல்பாடுகள் தனியார் மயமாக்கப் படுவதை நிறுத்தி வைக்க வேண்டும். மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைகள் மீண்டும் தொடர்ந்து வழங்க வேண்டும்.

13. பி.எஸ்.என்.எல். ஐ முழுமையாக புணரமைத்து, நவீன தகவல் தொடர்பு துறையாக மாற்ற வேண்டும். பி.எஸ்.என்.எல். ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தை திருத்தி சிக்கல்களுக்கு தீர்வு காண வேண்டும்.

14. அக்னிவீர் திட்டத்தை கைவிட வேண்டும். ராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதில் பழைய முறை தொடர வேண்டும்.

15. மத்திய அரசில் காலியாக உள்ள 11 லட்சத்திற்கு மேற்பட்ட பணியிடங்களையும் பொதுத்துறையில் காலியாக உள்ள 5 லட்சம் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப வேண்டும். அவுட்சோர்சிங் மற்றும் ஒப்பந்த பணி நியமனங்கள் மூலம் ஆட்களை நிரப்புவதை கைவிட வேண்டும்.

16. நாட்டின் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் மாதம் ரூபாய் 26,000 மாக நிர்ணயம் செய்ய வேண்டும்.

17. "அமைப்புசாராத் தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக திரட்டுவது அமைப்பு சார்ந்த தொழிலாளர்களின் கடமையாகும்", என்று இந்திரஜித் குப்தா அழைப்பு விடுத்தார். பெங்களூருவில் நடைபெற்ற ஏ. ஐ. டி. யூ. சி. யின் 32 வது அமர்வு வலியுறுத்தியதின் அடிப்படையில் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் அதை மீண்டும் கையில் எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. "ஏ ஐ டி யூ சி யின் 103 வது ஆண்டில் அமைப்புசாரா தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக திரட்ட உறுதி ஏற்போம்."

18. திட்ட பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், ஆஷா தொழிலாளர்கள், மதிய உணவு பணியாளர்கள், வீட்டு வேலை பணியாளர்கள், ஓட்டுநர்கள், சுமை பணியாளர்கள், ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்கள், மீனவர்கள் இப்படி பதிவு செய்யப்படாத சிறு தொழில் துறை தொழிலாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்க வேண்டும்.

19. உலக மயமாக்கல் காரணமாக 1991 முதல் உலகில் பெரும் பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டு வருகிறது. இந்தியாவில் வேலைவாய்ப்பு மேலும் மேலும் குறைந்து வருகிறது. ஒன்றிய பாஜக ஆட்சியில் நிலைமை மேலும் மோசமடைந்து உள்ளது. உதாரணத்திற்கு சுரங்க வேலைகள் ஒப்பந்த அடிப்படையில் கொடுக்கப்படுவது என்பது போய் முழு சுரங்கங்களையும் தனியாருக்கு கொடுத்து விடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# 2024 பொதுத் தேர்தலிலேயே பெண்கள் இடஒதுக்கீட்டை அமல்படுத்துக!

## பினாய் விஸ்வம் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்தல்



2023 (பெண்கள் இடஒதுக்கீடு) அரசியலமைப்புச் சட்டம் (128வது திருத்த) மசோதா மீது செப்டம்பர் 21ல் நடைபெற்ற விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பினாய் விஸ்வம் எம்பி பங்கேற்றுப்பேசினார்; அப்போது அவர், 'தனது வாழ்நாள் முழுவதும் பெண்கள் பிரதிநிதித்துவத்திற்காகப் போராடிய பெரும் களப்போராளியான கீதா முகர்ஜியின் கட்சியான சிபிஐ சார்பில் மசோதாவை வரவேற்கிறேன். மேலும் பெண்கள் இடஒதுக்கீட்டை 2024 பொதுத் தேர்தல்களில் அமல்படுத்தப்படுவதை உறுதி செய்யுமாறு அவர் அரசை வேண்டினார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு அல்லது தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரிலான அனைத்துத் தடைகளை அரசு நீக்க வேண்டும், இடஒதுக்கீட்டை மாநிலங்களவை மற்றும் மாநிலங்களின் அனைத்து மேலவைகளுக்கும் நீட்டிப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். அதேபோல, இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் (ஓபிசி) மற்றும் சிறுபான்மையினர்களுக்கு நியாயமாக உரிமையுள்ள பங்கை வழங்குவதன்மூலம் அவர்களின் உரிமைகளை அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

பா.ஜ.க. கொண்டு வந்துள்ள இம்மசோதா தேர்தல் ஆதாயங்களுக்காக மட்டுமே. ஆர்எஸ்எஸ் அமைப்பின் தொங்கு தசை அரசியல் அமைப்பே பாஜக என்பதை அனைவரும் அறிவர்; அந்த ஆர்எஸ்எஸ் தனது அமைப்பில் ஒற்றை பெண் உறுப்பினரைக்கூட இடம் பெற உரிய இடமளித்ததில்லை. ஒரு பெண் ஆணுக்குச் சமமாக உட்கார முடியும் என்பதில் நம்பிக்கையற்ற ஆர்எஸ்எஸ், அதற்குப் பதிலாக, ராஷ்ட்ரிய சேவிகா சமிதி (தேசியப் பெண் தொண்டர்கள் குழு) அமைத்துள்ளது. பாஜகவும் ஆர்எஸ்எஸும் மனுஸ்மிருதியைப் பின்பற்றி, 'ந ஸ்திரி ஸ்வதந்தரையம் அர்கதி' (பெண்ணுக்குச் சுதந்திரமாக இருக்கும் அருகதை இல்லை) என்ற அதன் வாசகத்தில் நம்பிக்கை உடையவை. மனுஸ்மிருதியைப் பின்பற்றுபவர்கள், பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான ஒரு மசோதாவிற்கு நேர்மையானவர்களாக இருக்க முடியாது. அவர்களுடைய அக்கறை எல்லாம் தேர்தல் வெற்றிகளும், மற்றும் அதற்காகவே இந்த மசோதாவை அவர்கள் கொண்டு வந்துள்ளனர்.

இந்தியாவின் பெண் குடியரசுத் தலைவரான திரௌபதி முர்முவை நாடாளுமன்றப் புதிய கட்டடத் திறப்பு விழாவில் காண முடியவில்லை. அவர் ஒரு பெண்மணி மற்றும் ஆதிவாசி என்பதால் வேத மந்திரம் முழங்க நடைபெற்ற மாபெரும் விழாவுக்கு அவருக்கு இடமில்லை. மேலும் பாஜக ஆட்சியில் மணிப்பூர் பெண்கள் வீதிகளில் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்டனர். பல்வேறு தடைகளுடன் 2029 மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுசீரமைப்புடன் சேர்த்து மசோதாவை அரசு கொண்டு வந்துள்ளது.

அரசு கொண்டு வந்துள்ள மசோதா, நரி ஒரு நாரையை விருந்துக்கு அழைத்த கதைபோல உள்ளது. நரி வைத்த விருந்தில் நாரைக்குச் சூப் ஒரு பெரிய தட்டில் வழங்கப்பட்டது. தட்டு எவ்வளவு பெரிதாக இருந்தென்ன?, சூப் சுவையாக இருந்தும் என்ன? நீண்ட அலகை உடைய நாரையால் தட்டிலிருந்து ஒரு வாய்கூட சூப்பை உண்ண முடியவில்லை. அதே கதைதான் இந்த மசோதாவிலும் நடக்கும். இந்த மசோதா பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்காக அல்ல; மாறாக, பாஜகவின் தேர்தல் பயனுக்காகவே கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் நாடு இதனை அறியும் தேர்தல்கள் நடக்கும்போது மக்கள் பாஜகவைத் தோற்கடிப்பார்கள் என தனது உரையில் பினாய் விஸ்வம் பா.ஜ.க வை சாடினார்.

# வாச்சாத்தி வழக்கில் வரலாற்று புகழ் பெறும் தீர்ப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு




வாச்சாத்தி வழக்கில் வரலாற்று புகழ் பெறும் தீர்ப்பை வரவேற்பதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது.

கடந்த 1992 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டம், வாச்சாத்தி பழங்குடி மக்கள் கிராமத்தில் அரசு நிர்வாகத்தின் அட்டூழியம் அரங்கேறியது.

அன்றைய தமிழ்நாடு அரசின் வனத்துறை அதிகாரியின் வரம்பு மீறிய குற்றச் செயல்களுக்கு வருவாய் துறை, காவல்துறை நிர்வாகமும் உடந்தையாக இருந்து துணை புரிந்தனர்.

நாகரிக சமூகம் வெட்கித் தலைகுனிந்து நின்ற இந்த சம்பவத்தில் வாச்சாத்தி கிராமத்தின் ஒட்டு மொத்த மக்களும் அனைத்தையும் இழந்து, வனத்துறையின் காட்டு மிராண்டி தாக்குதலுக்கும், மனித மிருகங்களின் வன்புணர்வு தாக்குதலுக்கும் ஆளானார்கள்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கமும், கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட இடதுசாரி கட்சிகளும் ஆதரவாக களம் இறங்கி நீதி கேட்டு தொடர்ந்து போராடி வருகின்றன.

இது தொடர்பாக வழக்கை விசாரித்து வந்த தருமபுரி முதன்மை அமர்வு நீதிமன்றம் வனத்துறை, வருவாய்த்துறை, காவல்துறை அதிகாரிகள் என 200 க்கும் மேற்பட்டவர்களை குற்றவாளிகள் என்று உறுதி செய்து 2011 ஆம் ஆண்டு தண்டனை வழங்கியது.

மாவட்ட முதன்மை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, குற்றவாளிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடுகள் செய்தனர். இந்த மேல் முறையீடுகளை சென்னை உயர் நீதிமன்றம் விசாரித்து வந்தது. இன்று (29.09.2023) மேல்முறையீடுகளை விசாரித்த நீதிபதி பி.வேல்முருகன் அமர்வு மேல்முறைகள் அனைத்தையும் தள்ளுபடி செய்து, குற்றவாளிகளுக்கு விசாரணை நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

மேலும், குற்றச் சம்பவம் நடந்த போது நிர்வாகப் பொறுப்பில் இருந்த மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் முதன்மை தலைமை வன அலுவலர் மற்றும் மாவட்ட வன அலுவலர் ஆகியோர் மீது துறை சார்ந்த விசாரணை நடத்த வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்பதுடன், இந்த வழக்கு விசாரணையில் ஆரம்பம் முதல் இதுவரை அமைப்பு சார்ந்த முறையில் சட்டப் போராட்டத்தை நடத்திய வாச்சாத்தி மக்களுக்கும், ஆதரவு அளித்து வந்த அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது என இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நாகை மீனவர்கள் மீது தாக்குதல் ஒன்றிய அரசு தலையிட வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

நாகை மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள், இலங்கை கடற்படை தாக்குதல் விவகாரத்தில் ஒன்றிய அரசே உடனே தலையிட்டு தீர்வு காணவேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. இது குறித்து இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியை அடுத்த செருதூரைச் சேர்ந்த சக்தி பாலன், ஹரி கிருஷ்ணன், சூர்யா, சிரஞ்சீவி, கண்ணன் ஆகிய மீனவர்கள் கடந்த 24ஆம் தேதி கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். வேதாரண்யத்தை அடுத்த கோடியக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற் கொள்ளையர்கள் இவர்கள் மீது தாக்குதல் நடத்தி 550 கிலோ வலை, 100 கிலோ மீன்கள் வாக்கி டாக்கி, ஜிபிஎஸ் கருவி, பேட்டரி, டார்ச் லைட், உள்ளிட்டு ஐந்து லட்சம் மதிப்புள்ள பொருட்களை கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர். ஏற்கனவே செப்டம்பர் 23ஆம் தேதி, இதேபோல் சிறுதூரைச் சேர்ந்த மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 600க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 2500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடந்த 25ஆம் தேதி மீன்பிடிக்க கடலுக்குள் சென்று உள்ளனர். இவர்களில் பாலு என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் ஜஸ்டின், சேகர், ஒஸ்வத் பிராங்கிளின் ஆகிய மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த பொழுது இலங்கை கடற்படை இவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இதுவரை இலங்கை கடற்படையினர் தான் தாக்குதல் நடத்துகிறார்கள் என்ற நிலையில் இப்பொழுது இலங்கை கடற்கொள்ளையர்களும் தாக்குதல் நடத்த தொடங்கி இருக்கிறார்கள். மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி என்பதைப் போல தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையாலும், இலங்கை கொள்ளையர்களாலும் தாக்கப்படுவது மிகப்பெரிய கண்டனத்திற்குரியது.

இலங்கை கடற்படையும் இலங்கை கடற்கொள்ளையர்களும் இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து இத்தகைய அராஜகத்தை செய்யும் பொழுது, இந்திய மீனவர்களையும் இந்திய கடல் எல்லைகளையும் பாதுகாக்க வேண்டிய இந்திய கடற்படை என்ன செய்து கொண்டிருக்கிறது? என்ற கேள்வி எழுகிறது. மோடி தலைமையிலான ஒன்றிய அரசு இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய மீனவர்கள் இல்லையா? இவர்களை இந்திய கடற்படை பாதுகாக்காதா? என்ற ஐயம் எழுகிறது. எனவே ஒன்றிய அரசு உடனடியாக தலையிட்டு கடல் எல்லைகளை பாதுகாக்க வேண்டும். தமிழ்நாடு மீனவர்களையும் பாதுகாக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உரிய இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில குழுவின் சார்பில் இரா. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

# கோட்டூர் அம்புஜம் மறைவுக்கு இரங்கல்

## இரா.முத்தரசன் அறிக்கை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை:

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்ட முன்னணி தலைவர்களில் ஒருவரும், கோட்டூர் ஒன்றிய ஊராட்சியின் முன்னாள் தலைவருமான அம்புஜம் (வயது 73) காலமானார் என்ற செய்தி ஆழ்ந்த வேதனை அளிக்கிறது.

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், அழகிரி கோட்டகம் கிராமத்தில் வசித்து வந்த தோழர் அம்புஜம் சிறு வயதில் இருந்தே இடதுசாரி இயக்கத்தோடு பயணித்தவர். இவரது கணவர் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகியாகவும், கூட்டுறவு சங்கத் தலைவராகவும் செயல்பட்டவர்.

விவசாயத் தொழிலாளர்களை சங்க அமைப்பில் அணிதிரட்டும் பணியில் ஈடுபட்டு வந்த அம்புஜம், சங்கத்தின் ஒன்றிய நிர்வாகப் பொறுப்புகளிலும், மாவட்டக் குழு உறுப்பினர், மாநிலக் குழு உறுப்பினர் போன்ற உயர் பொறுப்புகளில் சிறப்பாக பணியாற்றியவர்.

மாதர்களின் உரிமைகளுக்கான போராட்டங்களிலும் முன்னணி வகித்த அம்புஜம் இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்டத் தலைவர் மற்றும் செயலாளர் பொறுப்புகளில் செயல்பட்டவர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை வழிநின்று செயல்படுவதில் உறுதி காட்டியவர். இவர் கட்சியின் மாவட்ட குழு மற்றும் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர், மாநிலக் குழு உறுப்பினர் பொறுப்புகளில் செயல்பட்டு கட்சிக்கு பெருமை சேர்த்தவர். கோட்டூர் ஒன்றிய ஊராட்சியின் தலைவர், திருவாரூர் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர், ஒன்றிய ஊராட்சிக் குழு உறுப்பினர் என மக்கள் பிரதிநிதியாக தொடர்ந்து பணியாற்றி, அனைத்துப் பகுதி மக்களின் நன் நம்பிக்கையை பெற்றவர். அவரது இழப்பு எளிதில் ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும். அம்புஜத்தின் கணவர் ராஜமாணிக்கம், மகன் சக்திவேல், மகாலட்சுமி என்ற மகளும் உள்ளனர்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து, செவ்வணக்கம் செலுத்துகிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது கணவர் மற்றும் குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

# எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கூறியுள்ளதாவது.

உலகப் புகழ் பெற்ற வேளாண் விஞ்ஞானி முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன் (98) காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு வேதனையுற்றோம்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரில், நல்ல செல்வாக்கு பெற்ற மருத்துவம் பயின்ற குடும்பத்தில் *1925 ஆகஸ்ட் 7 ஆம் தேதி பிறந்த* எம் எஸ் சுவாமிநாதன் சிறுவயதில் அண்ணல் மகாத்மா காந்தியின் சிந்தனையால் ஈர்க்கப்பட்டவர். தேச விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து வந்தார். உழவுத் தொழில் மீது ஆர்வம் கொண்ட எம்.எஸ்.சுவாமிநாதன் அது தொடர்பாக தொடர்ந்து பயின்று பல்வேறு பட்டங்களையும், விருதுகளையும் பெற்றவர்.

*1960 ஆம் ஆண்டுகளில் நாடு எதிர் கொண்ட கடுமையான உணவுப் பஞ்சத்தை சமாளிக்க "பசுமை புரட்சி" க்கு* வித்திட்டவர். விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டு, பின்னர் ஒன்றிய அரசில் வேளாண்மைத் துறை அமைச்சர்களாக பணியாற்றிய சி.எஸ்.சுப்பிரமணியம், ஜெகஜீவன் ராம் ஆகியோருடன் மிக நெருக்கமாக இணைந்து செயல்பட்டவர். உலகளவிலான வேளாண்மை, நீர் நிர்வாகம், நவீன விவசாயம் குறித்து ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர். உழவுத் தொழில் ஆராய்ச்சி உலகில் மின்னும் தாரகையாக ஜொலித்தவர்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி காலத்தில், விவசாயிகள் ஆணையத்தின் தலைவராக பொறுப்பேற்று செயப்பட்டவர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களுக்கு, உற்பத்தி செலவுக்கு மேல் 50 சதவிதம் அதிகமான தொகை சேர்த்து, குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்க வேண்டும் என வலுவாக பரிந்துரை வழங்கியவர். எம்.எஸ்.சுவாமிநாதன் வாழ்விணையர் மீனா சுவாமிநாதன் அண்மையில் காலமாகிவிட்டார். இவர்களுக்கு உலக சுகாதார நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானியாக செயல்படும் சௌமியா சுவாமிநாதன், பெங்களூருவில் செயல்படும் இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் பொருளாதார ஆய்வுப் பேராசிரியர் மதுரா சுவாமிநாதன், இங்கிலாந்து நாட்டில் பேராசிரியராக பணியாற்றி வரும் நித்யா ராவ் ஆகிய மூன்று மகள்கள் உள்ளனர்.

இவர்களால் உருவாக்கப்பட்ட எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை குறிப்பிடத்தக்கது. எம்.எஸ்.சுவாமிநாதன் மறைவால் விவசாய ஆராய்ச்சி உலகம் சிறந்த வழிகாட்டியை இழந்து விட்டது. அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து வாடும் அவரது மகள்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என தனது அறிக்கையில் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

# சனாதன தர்மமும் – சமூக நீதியும் நூல் வெளியீட்டு விழா



அனைத்திந்திய முற்போக்குப் பேரவையின் (AIPF) அகில இந்திய இரண்டாவது மாநாடு, கேரள மாநிலத் தலைநகர், திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.

அதையொட்டி, '21ம் நூற்றாண்டில் கூட்டாட்சி ஜனநாயகம் மற்றும் அரசு' என்ற தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கின் இரண்டாம் நாளில், ஏ.ஐ.பி.எஃப்ன், தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் அவர்கள் எழுதிய 'சனாதன தர்மமும் சமூக நீதியும்' என்ற சிறு நூல் வெளியிடப்பட்டது.

ஏ.ஐ.பி.எஃப் ன், அகில இந்தியத் தலைவர் பொறியாளர் எம்.விஜயக்குமார் இந்நூலை வெளியிட்டார்.

மார்க்சிய அறிஞரும், ஏ.ஐ.பி.எஃப் ன், அகில இந்தியப் பொதுச் செயலாளருமான அனில் ராஜிம் வாலே பெற்றுக் கொண்டார்.




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழரும், தொழிற்சங்க முன்னோடியுமான மாதவரம் தோழர் சி.கே. மாதவன் 33ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி (29.09.2023), அவருடைய நினைவிடத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாதவரம் கிளை சார்பாக நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட துணை செயலாளர் தோழர் ஜீ.சுப்ரமணி, மாவட்ட பொருளாளர் தோழர் கீ.சு.குமார், சி.ஜெ.ஆனந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மகாத்மா காந்தி பிறந்தநாள் விழா

***தென்காசி:*** தென்காசி மாவட்டம் செங்கோட்டை சிவகிரி, புளியங்குடி ஆகிய ஊர்களில் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கீழ ஆம்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டு குழு தலைவர் கே. சுப்பராயன், மாநில செயற்குழு உறுப்பினர் கே . சந்தானம், ஏ. ஐ. டி. யூ. சி. மாநிலத் தலைவர் எஸ். காசி விஸ்வநாதன், த. இசக்கித்துரை, மாவட்ட செயலாளர் எஸ். வேலாயுதம், மாவட்டத் துணைச் செயலாளர் தி. சுப்பையா, ஏ. ஐ. டி. யு. சி. மாவட்ட பொது செயலாளர் எம். எஸ். கிட்டப்பா, ஏ. பரமசிவன் ஆகியோர் பங்கேற்றனர்.

***திருச்செங்கோடு:*** நகர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மகாத்மா காந்தி பிறந்த தினம் நகரச் செயலாளர் எஸ்.சுகுமார் தலைமையில் போற்றப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் டி.கே.சுப்பிரமணி, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், சிபிஐ நகர குழு உறுப்பினர்கள் ஆர்.கோபிராஜ், எம்.முனுசாமி மற்றும் கட்சி தோழர்கள் கலந்து கொண்டனர்.

டாஸ்மாக் கடையை அகற்ற கோரி

## கருப்பு கொடி ஆர்ப்பாட்டம்




தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் புளியக்குடி மேலத்தோப்பில் செயல்பட்டு வரும் டாஸ்மார்க் கடையை அகற்றக்கோரி, வீடுகளில் கருப்பு கொடியேற்றியும், கையில் கருப்பு கொடி ஏந்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைபெற்றது. இந்த போராட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் எம்.வெங்கடேசன் தலைமை வகித்தார். மேலத்தோப்பு பகுதியைச் சேர்ந்த கே.மகேந்திரன், சி. கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட துணை செயலாளர் ஆர்.செந்தில்குமார், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆர்.எஸ். பாலு, நகர செயலாளர் கே.ராஜாராம் நிர்வாகிகள் எஸ். திருநாவுக்கரசு, எம். சின்னராஜா உள்ளிட்ட ஏராளமானோர் பெண்கள், ஆண்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### வினாடி - வினா விடைகள்

1. எட்வர்ட் ஒயிட்
2. கழுகு என்று அழைக்கப்பட்ட நிலவு ஆய்வுக்கலம் (LEM)
3. 1942 ஆம் ஆண்டு மும்பை காங்கிரஸ் மாநாட்டில்.
4. 1917 ஆம் ஆண்டு சம்பரானில் நடைபெற்றது.
5. கேரளாவில் 1921 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் தேதி
6. இரும்பு காற்றில் உள்ள ஆக்சிஜனுடன் வினைபுரிந்து அதன் ஆக்சைடாக மாறுவது.

# விபத்தில் கால்களை இழந்த தொழிலாளிக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும்

**ஏ.ஐ.டி.யு.சி. மாநிலத் துணை தலைவர் என். செல்வராஜ் வலியுறுத்தல்**

கோவை மாவட்டம் வெள்ளலூர் குப்பை கிடங்கில் ஏற்பட்ட விபத்தத்தில் கால்களை இழந்த தொழிலாளி சத்யாவுக்கு இழப்பீடு ஒரு கோடி வழங்க ஏஐடியுசி மாநில துணை தலைவர் என். செல்வராஜ் கோரிக்கை. இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

கோவை வெள்ளலூர் குப்பை கிடங்கில் உள்ள உரக்கடங்கில் நடைபெற்ற விபத்து என்பது மாநகராட்சி நிர்வாகம் தொழிலாளர்களின் பணியிட பாதுகாப்பில் எவ்வளவு அலட்சியமாக இருந்திருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டு காட்டி இருக்கிறது.

இவ்வளவு அபாயம் மிகுந்த இயந்திரங்களில் பணியாற்றுவதற்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்ட பணியாளர்களை நிரந்தரமாக அமர்த்துவதற்கு பதிலாக, ஒப்பந்த அடிப்படையில் பயிற்சி அற்ற தொழிலாளர்களை பயன்படுத்துவது மிகக் கொடூரமாக வெளிப்பட்டிருக்கிறது.

சிறந்த மாநகராட்சிக்கான ஜனாதிபதி விருதை பெற்ற இரண்டு நாட்களுக்குள் இந்த விபத்து நடந்திருப்பது என்பது மாநகராட்சி நிர்வாகம் தொழிலாளர்கள் விஷயத்தில் எவ்வளவு அலட்சியமாகவும், மோசமாகவும் நடந்து கொள்கிறது என்பதை இது காட்டுகிறது.

இந்த விபத்திற்கு மாநகராட்சி நிர்வாகம் முழு பொறுப்பேற்க வேண்டும். ஒப்பந்ததாரர்களை உடனடியாக ரத்து செய்து வெளியேற்ற வேண்டும். நடந்துள்ள விபத்தில் பாதிக்கப்பட்டிருக்கிற சத்யாவுக்கு உயரிய முழுமையான மருத்துவ சிகிச்சைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

மருத்துவ செலவுகள் முழுமையும் ஒப்பந்ததாரரும், மாநகராட்சியும் ஏற்க வேண்டும். பாதிக்கப்பட்ட சத்யாவுக்கு உடனடியாக ஒரு கோடி ரூபாய் இழப்பீடு அறிவித்து வழங்கப்பட வேண்டும்.

அதோடு சத்யாவின் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு நிரந்தர அரசு பணி வழங்கப்பட வேண்டும் என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

ஆட்டோ செயலியை விரைந்து துவக்க கோரி

## ஆட்டோ தொழிலாளர்கள் கோட்டை நோக்கி பேரணி




நீதிமன்ற தீர்ப்பின்படி ஆட்டோ மீட்டர் கட்டணத்தை உயர்த்திக் கொடு, ஆட்டோ செயலியை விரைவாக துவக்கு, புதிய மோட்டார் வாகன சட்டத்தை அமல் படுத்தாதே, ஆட்டோகளுக்கு ஆன்லைன் அபராதம் விதிக்காதே, ஓலா, உபர், ரேப்பிடோ பைக் டாக்ஸியை தடை செய், பர்மிட் இல்லாமல் விதிகளை மீறி இயங்கும் கிரியின் மெட்ரோ ஆட்டோவை பொதுச் சேவைக்கு அனுமதிக்காதே, புதிய ஆட்டோவுக்கு ரூபாய் பத்தாயிரம் மானியம் வழங்கு. மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஏ. ஐ. டி. யு. சி. ஆட்டோ தொழிலாளர்கள் கோட்டை நோக்கி பேரணி நடைபெற்றது.

இதில் வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை ஆட்டோ தொழிலாளர்கள் சார்பில் சென்னை புதுப்பேட்டையில் இருந்து கோட்டை நோக்கி பேரணி நடைபெற்றது. பேரணியை எஐடியு சி மாநில நிர்வாக குழு மு. சம்பத் துவக்கி வைத்தார். பேரணி சிந்தாதிரிப்பேட்டை அடைந்து விளக்கக் கூட்டம் நடைபெற்றது. ஏ. ஐ. டி. யு. சி. பொதுச் செயலாளர் ம. ராதாகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். கட்டட தொழிலாளர் சங்க மாநிலச் செயலாளர் ஆர்.துரைசாமி, ஏ. ஐ. டி. யூ. சி. மாநில செயலாளர் பாஸ்கர், மத்திய சென்னை பா. கருணாநிதி உள்ளிட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆட்டோ தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

## பா.ஜ.க.வே ஆட்சியை விட்டு வெளியேறு: மறியல்

***காஞ்சிபுரம்:*** ஒன்றிய மோடி அரசாங்கத்தை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடரும் மறியல் போராட்டம் 12, 13, 14, என்று மூன்று நாட்கள் தொடர் மறியல் போராட்டத்தின் முதல் நாளான 12ஆம் தேதி காஞ்சி தொகுதியில் மாவட்ட செயலாளர் தோழர் பா.கார்த்திக் அவர்களின் தலைமையில் நடைபெற்றது மாவட்ட துணை செயலாளர் பி.வி. சீனிவாசன், தொகுதி செயலாளர் ஜே. கமல்நாதன், ஏ. ஐ. டி. யூ. சி. மாவட்ட பொதுச்செயலாளர் ஏ.மூர்த்தி, ஸ்டாலின், கிருஷ்ணமூர்த்தி, லாரன்ஸ், ஆறுமுகம் மற்றும் 200க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

***கரூர்:*** தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு மாவட்ட செயலாளர் கே.என். நாட்ராயன் தலைமை தாங்கினார் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பரமத்தியில் நடைபெற்ற மறியல் போராட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் எஸ். பாலகிருஷ்ணன் தலைமையேற்றார். இதில் 37 பேர் கைது செய்யப்பட்டனர். குளித்தலை தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு காந்தி சிலையிலிருந்து குளித்தலை தாலுகா செயலாளர் எம். பி. செல்வம் தலைமையில் ஊர்வலமாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### கோவில்பட்டியில் வந்தே பாரத் ரயில் நின்று செல்ல கோரி ஆர்ப்பாட்டம்

இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வந்தே பாரத் ரயில் கோவில்பட்டியில் நின்று செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து நகரச் செயலாளர் ஏ.சரோஜா எம்.சி., தாலுகா செயலாளர் ஜி.பாபு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக்குழு பரமராஜ், மாவட்ட நிர்வாக குழு சேதுராமலிங்கம், நகர துணைச் செயலாளர் டி. முனியசாமி, மாவட்ட குழு ரஞ்சனி கண்ணம்மா, மாதர் சங்க செயலாளர் ஏ.விஜயலட்சுமி, பொருளாளர் எம்.ராஜீ, நகர கமிட்டி எஸ்.சண்முகவேல், நகர துணைச் செயலாளர் ஜி.அலாவுதீன், நகரகுழு எஸ். சிதம்பரம், தாலுகா குழு ரஞ்சிதம் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர். பின்னர் அதிகாரிகளை சந்தித்து மனு அளித்தனர்.

## துப்புரவு பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

***விருதுநகர்:*** வெம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு, ஏஐடியுசி துப்புரவு பணியாளர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர் சங்கம் சார்பில் மாவட்ட செயலாளர் மாரியப்பன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. சம்பள உயர்வு, பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சிபிஐ ஒன்றிய செயலாளர் நடராஜன், தவிதொச ஜெயபிரகாஷ் ஆகியோர் பேசினார்கள்.

***ஆண்டிபட்டி:*** ஆண்டிபட்டியில் பேரூராட்சி தலைவரின் தொழிலாளர் விரோத போக்கை கண்டித்து ஏஐடியுசி துப்புரவு தொழிலாளர் சங்கம் சார்பில் பிச்சைமுத்து தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் பரமேஸ்வரன் தொடங்கி வைத்தார். ஒன்றிய செயலாளர் பிச்சைமணி, நகர செயலாளர் முனீஸ்வரன் ஆகியோர்கள் கண்டன உரையாற்றினர்கள். ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் ராஜ்குமார் முடித்து வைத்தார்.

## குமரி மாவட்ட பேரவைக்கூட்டம்

குமரி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாவட்ட பேரவைக்கூட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றது. கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.அனில்குமார் ஜி.சுரேஷ்மேசியதாஸ் முன்னிலை வகித்தனர். மாவட்டக்குழு உறுப்பினர் வி.அருணாசலம் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் ,திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், ஏ.ஐ.டி.யு.சி.யின் மாநிலத்தலைவர் எஸ்.காசி விஷ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் பி.தாமரைசிங் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## கலை இலக்கியப் பூங்கா

'பாரதியின் தாகமும் தவிப்பும்' என்ற தலைப்பில் சா.பீட்டர் அல்போன்ஸ் சிறப்புரை ஆற்றினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ. அழகிரிசாமி, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் தலைவர் எஸ்.கே.கங்கா வாழ்த்துரை வழங்கினர்.

# எட்டயபுரம் பாரதி விழா

**இலக்கிய பேராசான் ஜீவானந்தம் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட எட்டயபுரம் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் சார்பாக 'மகாகவி பாரதி விழா' 61வது ஆண்டு நிகழ்வாக செப்டம்பர் 23,24 ஆகிய இரு தேதிகளில் எட்டயபுரத்தில் நடைபெற்றது.**

முதல் நிகழ்வாக செப்டம்பர் 23ஆம் தேதி மாலை 5 மணி அளவில் பாரதி இல்லத்தில் இருந்து பாரதி மணிமண்டபம் வரை ஊர்வலம் நடைபெற்றது. இதில் பாரதி போன்று வேடமிட்ட நூற்றுக்கணக்கான குழந்தைகள் அணிவகுத்து வந்தனர்.



இந்த ஊர்வலத்திற்கு வி.எஸ்.எஸ் பஸ் உரிமையாளர் எஸ்.சுப்பையா தலைமை தாங்கி வந்தார். விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி. மார்க்கண்டேயன் பாரதி சிலைக்கு மாலை அணிவித்தார். அதனை தொடர்ந்து தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர்சா.பீட்டர் அல்போன்ஸ் பாரதி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் டி.பி.ஆர்.ஜி.எம் கோபி குழுவினரின் நாதஸ்வர இசையுடன் நிகழ்வு தொடங்கியது. இந்த நிகழ்விற்கு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம், தலைமை உரை வழங்கினார். பாரதி முற்போக்கு வாலிபர் சங்க தலைவர் வெங்கடேஷ் ராஜா வரவேற்புரை நல்கினார்.

'பாரதியின் தாகமும் தவிப்பும்' என்ற தலைப்பில் சா.பீட்டர் அல்போன்ஸ் சிறப்புரை ஆற்றினார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ. அழகிரிசாமி, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் தலைவர் எஸ்.கே.கங்கா வாழ்த்துரை வழங்கினர். நல்லாசிரியர் கனகா அவர்கள் ஒருங்கிணைத்த பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ மாணவியர்களுக்கு எட்டயபுரம் பேரூராட்சி தலைவர் சா.ராமலட்சுமி பரிசுகள் வழங்கினார். பாரதி முற்போக்கு வாலிபர் சங்க செயலாளர் வ.பாலமுருகன் நன்றியுரை நல்கினார்.



செப்டம்பர் 24 காலை 10 மணியளவில் 'பாரதி குறித்து எழுத்தாளர் தொமுசி ரகுநாதன் ஆய்வுகள்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. மார்க்சிய அறிஞர் பேராசிரியர் எஸ்.தோத்திரி தலைமை ஏற்று தலைமை உரை வழங்கினார். 'பாரதியும் ஷெல்லியும்' என்ற தலைப்பில் பேராசிரியர் ஆனந்தகுமார் அவர்களும், 'கங்கையும் காவிரியும்' என்ற தலைப்பில் பேராசிரியர் நா.ராமச்சந்திரன் அவர்களும், 'பாரதி காலமும் கருத்தும்' என்ற தலைப்பில் பேராசிரியர் கிருங்கை சேதுபதி அவர்களும், 'பாரதி சில பார்வைகள்' என்ற தலைப்பில் கவிஞர் ரவீந்திர பாரதி அவர்களும், 'பாஞ்சாலி சபதம் உரைபொருளும் மறைபொருளும்' என்ற தலைப்பில் பேராசிரியர் கணபதி இளங்கோ அவர்களும் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்விற்கு பின்பு நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் தொமுசி ரகுநாதன் எழுதிய பாரதியாரின் பாஞ்சாலி சபதம் உறைபொருளும் மறைபொருளும் நூல், பதிப்பாசிரியர் கிருங்கை சேதுபதி அவர்களின் நூல் வெளியிடப்பட்டது. நூலை பாரதி அன்பர் ராம் மோகன் வெளியிட, மாநில செயற்குழு உறுப்பினர் திரு. சின்னக்கண்ணன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

பாரதி முற்போக்கு வாலிபர் சங்க துணை தலைவர் எஸ்.சேது நன்றியுரை நல்கினார்.

மக்கள் இசைப் பாடல்கள் அரங்கத்தில் கலைமாமணி அமல புஷ்பம், சினிமா புகழ் அறந்தை பாவா, தாமிரபரணி கலைக்குழு கலை நிகழ்சிகளை நடத்தினர்.

படத்திறப்பு நிகழ்விற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன் தலைமை ஏற்றார். கே.தர்மராஜ் படத்தை, வெ.அழகிரிசாமியும், கவிஞர் இளசை அருணா படத்தினை எஸ்.ராமசுப்பு அவர்களும் திறந்து வைத்தனர்.

பின்னர் நடைபெற்ற கவியரங்கத்தை முனைவர் சத்தியபாலன் தொடங்கி வைத்தார். கவிஞர் கண்மணி ராசா தலைமையில் கவிஞர் ஆர்.ஜே. மணிகண்டன், கவிஞர் தங்கதுரையரசி, கவிஞர் ராம்குமார், கவிஞர் கலியமூர்த்தி, கவிதை பாடினர்.

பின்னர் நடைபெற்ற சிறப்பு பட்டிமன்றத்திற்கு கே.ஆர்.கல்வி குழுமம் இயக்குனர் தலைமை வகித்தார். பட்டிமன்ற புகழ் பத்மஸ்ரீ பேராசிரியர் சாலமன் பாப்பையா நடுவராக இருந்து 'பாரதி கண்ட ஆனந்த சுதந்திரம்' என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு 'அடைந்து விட்டோம்' என்ற அணிக்கு ராஜ்குமார், கருணாநிதி, முனைவர் ரேவதியும், 'அடையவில்லை' என்ற தலைப்பின் கீழ் பேராசிரியர் ராஜாராம், கவிதாஜவகர், எஸ்.ராஜா உரை நிகழ்த்தினர்கள். பாரதி முற்போக்கு வாலிபர் சங்க பொருளாளர் முருகேஷ் நன்றியுரை நல்கினார்.

### ஆதிராமனுக்கு புதுச்சேரி அரசின் இரு விருதுகள்

கோமாளிக் கலைக் குழு ஆதிராமன் எழுதிய 'தித்திக்கத் தித்திக்கப்




பறந்து வா' என்ற சிறார் நூல், சிறுவர் இலக்கியத்திற்கான புதுச்சேரி அரசின் 2022 ஆம் ஆண்டுக்கான 'நேரு குழந்தைகள் இலக்கிய விருது' பெற்றுள்ளது.

அதேபோல் 'கண்ணாடி மாளிகை' சிறுகதை தொகுப்பு 2015ஆம் ஆண்டுக்கான சிறந்த சிறுகதை நூலுக்கான 'கம்பன் புகழ் இலக்கிய விருதும்' பெற்றுள்ளது. விருதுகள் 21/9/23 கவிஞர் தமிழ்ஒளி விழாவில் வழங்கப்பட உள்ளது.

### மகாகவி பாரதி நினைவுக் கருத்தரங்கம்

அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, மதுரை மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மதுரை இணைந்து மகாகவி பாரதியார் நினைவுக் கருத்தரங்கை ரூசா அரங்கில் நிகழ்த்தின. கல்லூரி முதல்வர் சூ.வானதி தலைமை தாங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் சு.சந்திரா வரவேற்றார். மாவட்டத் தலைவர் கவிஞர் மு.செல்லா வாழ்த்துரை வழங்கினார்.

பாரதி ஆய்வறிஞரும், சாகித்ய அகாதெமி விருதாளரும் பெருமன்றத்தின் மாநிலச் செயலருமான பா.ஆனந்தகுமார் பாரதி ஆய்வுகள் என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியர்க்குப் பரிசுகளை வழங்கினார். பேராசிரியர் விஜயம், பேராசிரியர் கா.சத்தியா நன்றி கூறினார். பேராசிரியர் நசிமா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

*கோவை:* தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சூலூர் தெற்கு வட்டாரக் கிளை சார்பில் பாரதியார் நினைவு நாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

சூலூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் கண்ணம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் கவிதை, கட்டுரை, பேச்சு, பொது அறிவு வினாடி வினா போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. புத்தகங்கள் பரிசளிக்கப்பட்டது.

சூலூரில் வட்டாரக் கட்சி அலுவலகம் முன்பு பாரதியார் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர், இலக்கிய ஆர்வலர் சூ.மா.பத்மநாபன் இல்லத்தில் பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து கூட்டம் நடத்தப்பட்டது. இதில், தோழர்கள் சூ.பே.நடராசு, எஸ்.எம்.ஜயாசாமி, பெ.மௌனசாமி, வே.வசந்தகுமார், சி.விஜயகுமார், நா.காளிசாமி, ஆர்.வேலுசாமி உட்பட பங்கேற்றனர்.



### கவிதை நூல் வெளியீட்டு விழா

செங்கற்பட்டைச் சேர்ந்த கவிஞர் ஆ.கிருட்டிணன் எழுதிய 'மண் தொடும் விழிகள்' கவிதை நூல் வெளியீட்டு விழா, சென்னை நந்தனம் தாமரைக் குடியிருப்பிலுள்ள பொதுவுடமை கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு இல்லத்தில் எளிய இலக்கிய நிகழ்வாக நடைபெற்றது.

கலை இலக்கிய பெருமன்ற ஜேம்ஸ் தலைமையில் இரா.நல்லகண்ணு கவிதை நூலினை வெளியிட, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் மல்லை இ.சத்யா பெற்றுக்கொண்டார். கவிஞர் மு.முருகேஷ் வாழ்த்துரை வழங்கினார்.

விழாவில், ஓவியக் கவிஞர் நா.வீரமணி, டாக்டர் சாந்தி, மேனாள் தலைமையாசிரியை ஏ.செ.தேவகுமாரி, கவிஞர்கள் செங்கை தாமஸ், மல்லை தமிழச்சி, பாரதி ஜிப்ரான், தமிழ்மதி, குயில்குரல் ராஜேஸ்வரி, திரைக்கலைஞர் ஆ.கி.சரவணபாரதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### மணப்பாறை இளங்கோ மன்றத்தின் ஏழாமாண்டு இலக்கிய விழா

மணப்பாறை வெள்ளகல் சாலையில் இயங்கும் இளங்கோ மன்ற ஏழாமாண்டு இலக்கிய விழா கொண்டாடப்பட்டது.

மன்றத்தின் ஒருங்கிணைப்பாளர் பாரதி கனகராஜ் தொடக்க உரை நிகழ்த்தினார். செல்வி செங்காந்தளும், சிறுவன் சஜீவும் கதைகூறிமுடிக்க, கலைஞன் வேங்கை பாரதி நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

திருச்சி கேசவன், எஸ்.வி.ராஜதுரையின் மொழிபெயர்ப்புச் சாதனைகள் குறித்து உரை வழங்கினார்.

ஜனசக்தி புத்தக நிலைய இயக்குனர், ஜனசக்தி உசேன், உடற்கல்வி ஆசிரியர் ஜான்சி, வள்ளலார் வழி பயணிக்கும் அழகுசுந்தரம், பொன் அழகேந்திர ராசா ஆகிய நான்கு ஆளுமைகளுக்கு மாற்றத்தின் தூதுவர். விருதினை வழங்கி நிகழ்வின் தலைவர் முனைவர் ஏசுராசா

தொடர்ச்சி 14ம் பக்கம்




சென்னையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில், கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் இரா.முத்தரசன் தலைமையில், மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு, மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் உள்ளிட்டோர் மகாத்மா காந்தியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினர். மாநில, மாவட்ட நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.




மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் தேதி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் மரியாதை செலுத்தப்பட்டது. புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா தலைமையில், புதுச்சேரி மாநிலச் செயலாளர் அ.மு.சலீம் உள்ளிட்டோர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் மரியாதை செலுத்தினர். பின்னர் பேசிய அவர், பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றவில்லை. விலைவாசி உயர்ந்து கொண்டிருக்கிறது. வேலையில்லாத திண்டாட்டம் அதிகரிக்கிறது. மதத்தின் பெயரால் கலவரங்கள் தூண்டிவிடப்படுகிறது என்று டி.ராஜா குற்றம்சாட்டினார்.

13ஆம் பக்கத் தொடர்ச்சி

தலைமையுரை நிகழ்தினார் .

### ‘வைக்கம் 100’ நினைவும், நகர்வும்.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் (தன்னாட்சி) கல்லூரி மற்றும் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், சுதந்திர சிந்தனை ராஜபாளையம் அமைப்புகள் இணைந்து நடத்திய ‘வைக்கம் 100’ நினைவும், நகர்வும், பன்னாட்டுக் கருத்தரங்க நிகழ்வு கல்லூரி கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

தொடக்க விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் செ.அசோக் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். முதுகலை தமிழ்த் துறை மற்றும் தமிழாய்வு மையம் முனைவர் க.சிவனேசன் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் நோக்க உரையாற்றினார். பின்னர் நடந்த அமர்வில் முனைவர் பழ. அதியமான், ‘வைக்கம் போராட்டம் நடந்தது என்ன?’ என்ற தலைப்பில் மிக விரிவாக உரை நிகழ்த்தினார். முனைவர் திருநீலகண்டன், மருத்துவர் திருநாவுக்கரசன் உரை நிகழ்த்தினர். அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்க கேரள மாநில பொதுச் செயலாளர் முனைவர் வள்ளிக்காவு மோகன்தாஸ், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற செயற்குழு உறுப்பினர் சு. பாலச்சந்திரன் பெரியசாமி ராஜா உரை நிகழ்த்தினார்கள். மாலை நடைபெற்ற இணைய வழி நிகழ்வில் முனைவர் பழ.அதிகமானுடன் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது. இதில் மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, இலங்கை, இங்கிலாந்து நாடுகளிலிருந்து தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ் ஒளி நூற்றாண்டு தொடக்க விழா

புதுச்சேரி மாநில கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில், கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு தொடக்க விழா புதுச்சேரி, கிழக்கு கடற்கரை சாலை, சாமிப்பிள்ளை தோட்டத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு துரை. செல்வம் தலைமை வகித்தார். வ.சுப்பையா, அ.தயாளன் முன்னிலை வகித்தனர். புதுச்சேரி மாநில கலை இலக்கியப் பெருமன்ற செயலாளர் பால கங்காதரன் வரவேற்புரை வழங்கினார். மாநிலத் தலைவர் எல்லை.சிவகுமார் தொடக்கஉரைநிகழ்த்தினார். மூத்ததலைவர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் எழுதிய ‘கவிஞர் தமிழ் ஒளி’ நூல் கலைமாமணி பாவலர் மு.கு. ராமன் வெளியிட, கலைமாமணி கவிஞர் மு. பாலசுப்பிரமணியன், முனைவர் ம.பூபேஷ் குப்தா, பாரதி காதி உரிமையாளர் கி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

கவிஞர் தமிழ் ஒளி குறித்து கல்விப் புல ஆய்வு மேற்கொண்ட அமலோற்பவமேரி, பவானி பரசுராமன், ஜெயமாலினி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

புதுச்சேரி மாநிலத்தில், கவிஞர் தமிழ் ஒளி நினைவாக ஆண்டுதோறும் அரசு விழா நடத்த ஏற்பாடு செய்த முன்னாள் அமைச்சர்கள் தோழர் ஆர்.விசுவநாதன், எஸ்.பி.சிவக்குமார், கலை பண்பாட்டுத்துறை முன்னாள் இயக்குனர் சிவ.வீரபத்திர சாமி மற்றும் கவிஞர் தமிழ் ஒளி அவர்களை பத்திரமாக பாதுகாத்து, அவருடைய படைப்புகளை வெளியிட்டு வரும் மறைந்த சஞ்சீவி அவர்களின் புதல்வர் துரைவேல் சஞ்சீவி அவர்களுக்கும் விழா மேடையில் மரியாதை செய்யப்பட்டது.

விழாவில் மருத்துவர் த. அறம், புதுச்சேரி சிபிஐ மாநில செயலாளர் அ.மு.சலீம், இறுதியாக நிறைவுறை ஆற்றிய சிபிஐ தமிழ் மாநிலச் செயலாளர் ஆர். முத்தரசன் தமிழக அரசை போன்று புதுச்சேரி அரசும் தமிழ் ஒளி அவர்களுக்கு சிலை நிறுவ வேண்டும் என்றும், அவரது நினைவை போற்றும் வகையில் நிரந்தரமாக ஒரு நிதி ஒதுக்கி ஆண்டு தோறும் நிகழ்வுகள் நடத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். இந்நிகழ்வில் வழக்கறிஞர் சா.லெனின்துரை, திமுக இலக்கிய அணி அமைப்பாளர் சீனி.மோகன்தாஸ், தமுஎகச செயலாளர் மணி.கலியமூர்த்தி கலந்து கொண்டனர். இறுதியாக இரா.சந்திரகுமார் நன்றி உரை வழங்கினார். நிகழ்வில் புதுச்சேரி விடுதலைக் குரல் கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆதிராமன் கலந்து கொண்டு மக்களிசை பாடல்கள் பாடினார்.



## ‘நீலகண்ட பிரம்மச்சாரி’ நூல் வெளியீடு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்டக்குழு மற்றும் சுவடு பதிப்பகம் இணைந்து ‘நீலகண்ட பிரம்மச்சாரி’ நூல் வெளியீட்டு விழா சென்னை பாலன் இல்லத்தில் நேற்று (2102023) காலை 10 மணி அளவில் நடைபெற்றது. சென்னை மாவட்ட தகஇபெ செயலாளர் கணபதி இளங்கோ வரவேற்புரை ஆற்றினார். கவிஞர் கே.ஜீவபாரதி தலைமை தாங்கினார். மூத்த தலைவர், தோழர் இரா.நல்லகண்ணு நூலை வெளியிட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார். கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். சிறப்பு பிரதிகளை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசியச் செயலாளர் டி.எஸ்.நடராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் வெங்கடேஷ் வேம்புலி, பா.கருணாநிதி, எஸ்.கே.சிவா ஆகியோர் பெற்றுக் கொண்டனர். தோழர் பாஸ்கர் நூல் மதிப்பீட்டு உரை வழங்கினார். நூலாசிரியர் கோமதி சங்கர் ஏற்புரை வழங்கினார்.





### தொ.மு.சி ரகுநாதன் நூற்றாண்டு கருத்தரங்கம்

சாகித்திய அகாதெமி மற்றும் பொள்ளாச்சி ந.க.ம கல்லூரி தமிழ்த் துறை இணைந்து நடத்திய ‘தொமுசி ரகுநாதன் நூற்றாண்டு கருத்தரங்கம்‘ பொள்ளாச்சியில் நடைபெற்றது.

கல்லூரி வளாகத்தில் உள்ள மகாகவி பாரதியார் மற்றும் விவேகானந்தர் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

விழாவில் நோக்க உரையும், வரவேற்பு உரையும் சாகித்திய அகாதெமி தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் இரா.தாமோதரன் வழங்கினார். கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தலைமை உரையாற்றினார். கல்லூரியின் தலைவர் பி.கே கிருஷ்ணராஜ வாணவராயர் தொடக்க உரையாற்றினார். கல்லூரி முதல்வர் பேராசிரியர் ரெ.முத்துக்குமரன், பேராசிரியர் பரமேஸ்வரி வாழ்த்துரை வழங்கினர். மருத்துவர் த.அறம் சிறப்புரை ஆற்றினார்.தமிழ் இலக்கியத் துறை தலைவர் த.ராஜ்குமார் நன்றியுரை வழங்கினார்.

கருத்தரங்கின் முதல் அமர்வில் ப.பா. ரமணி ‘தொமுசி ரகுநாதனின் பத்திரிக்கை பணிகள்’ என்ற தலைப்பிலும், பேராசிரியர் காசி மாரியப்பன் ‘தொமுசி ரகுநாதன் கவிதைகள்’ என்ற தலைப்பிலும், பேராசிரியர் வி.ராமராஜ் ‘தொமுசி ரகுநாதனின் நாடகங்கள்’ என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்கினர்.

இரண்டாம் அமர்வில் ‘தொமுசி ரகுநாதனின் கதைகள்’ என்ற தலைப்பில் எழுத்தாளர் வேணுகோபால், ‘க்ஷணப்பித்தம்‘ குறித்து பேராசிரியர் கந்தசுப்பிரமணியம், ‘தொமுசி ரகுநாதனின் கவிதை நாடகம்‘ என்ற தலைப்பில் பேராசிரியர் ந. வேலுமணி, ‘சேற்றில் மலர்ந்த செந்தாமரை’ குறித்து பேராசிரியர் சோ.சேதுபதி கருத்துரை வழங்கினர். இரண்டாம் நாள் நடந்த மூன்றாவது அமர்வில் ‘பஞ்சும்பசியும்‘குறித்து பேராசிரியர் ரவிக்குமார், ‘புயல்’ குறித்து பேராசிரியர் சுடலைமணி, ‘கன்னிகா’ குறித்து பேராசிரியர் மு.மதியழகன், ‘தொமுசி ரகுநாதனின் மொழிபெயர்ப்புகள்’ குறித்து பேராசிரியர் வீரலட்சுமி கருத்துரை வழங்கினர்.

நான்காவது அமர்வில் ’பாரதி ஆய்வு’ குறித்து பேராசிரியர் பா.ஆனந்தகுமார், ‘புதுமைப்பித்தன் ஆய்வு’ குறித்து பேராசிரியர் மு.செந்தில்குமார், ‘சிலப்பதிகார ஆய்வு’ குறித்து பேராசிரியர் நா.முருகேச பாண்டியன் கருத்துரை வழங்கினர்.

தமிழ்த் துறை தலைவர் மகேஸ்வரி தலைமையில் நடைபெற்ற நிறைவு விழாவில், கலை விமர்சகர் இந்திரன் நிறைவரை ஆற்றினார். சாகித்திய அகாதெமி மற்றும் ந.ம.க. கல்லூரி இணைந்து நிகழ்த்திய நிகழ்வு ஏராளமான கல்லூரி மாணவர்களின் பங்கேற்புடன் சிறப்புடன் நடைபெற்றது.

# அக். 3 கருப்பு நாள்

# அனைத்து தொழிற்சங்கங்கள் நாடு தழுவிய போராட்டம்

## அமர்ஜித் கவுர் அறிக்கை



மத்திய தொழிற்சங்கங்கள் கூட்டமைப்புகள், விவசாய சங்கங்கள் சார்பாக எஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:

நாடு முழுவதும் உள்ள விவசாயிகளும் தொழிலாளர்களும் 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் தேதியன்று, மாவட்ட மற்றும் வட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள், உருவபொம்மை எரிப்பு மற்றும் பொதுக்கூட்டங்கள் நடத்திய செய்திகள் குவிந்து வருகின்றன. மத்திய தொழிற்சங்கங்களும், சுயேச்சையான துறைசார்ந்த கூட்டமைப்புகளும், ஐக்கிய விவசாயிகள் முன்னணியும் சேர்ந்து 24 ஆகஸ்ட் 2023 அன்று புதுதில்லியில் உள்ள தல்கடோரா ஸ்டேடியத்தில் நடைபெற்ற விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் அகில இந்திய கூட்டு மாநாடு இந்த அழைப்பை விடுத்திருந்தது.

அக்டோபர் 3, 2021 அன்று லக்கிம்பூர் கெரி எனும் இடத்தில், விவசாயிகள் படுகொலைக்கு சதி செய்ததாகக் கூறப்படும் உள்துறை அமைச்சர் அஜய் மிஸ்ரா டெனியை பதவி நீக்கம் செய்து வழக்குத் தொடர வேண்டும் என்பது போராட்டத்தின் முக்கிய கோரிக்கையாகும். அமைச்சர் மற்றும் அவரது மகன் ஆஷிஷ் மிஸ்ரா தேனி ஆகியோர் படுகொலையின் மூளையாக செயல்பட்டதாகவும், இந்த தாக்குதலில் நான்கு விவசாயிகள் நக்ஷத்ரா சிங், குர்விந்தர் சிங், லவ்பிரீத் சிங் மற்றும் தல்ஜீத் சிங் மற்றும் பத்திரிகையாளரான ராமன் காஷ்யப் கொல்லப்பட்டனர்.

விவசாயத்தை பெரும் முதலாளிகள் கையில் தருவதை நோக்கமாகக் கொண்ட மூன்று கார்ப்பரேட் சார்பு பண்ணை சட்டங்களுக்கு எதிரான ஐக்கிய விவசாயிகள் போராட்டத்தை நசுக்க பாஜக அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டது. மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளால் தீவிரமாக ஆதரிக்கப்பட்ட ஐக்கிய விவசாயிகள் போராட்டத்தை மோடியால் தோல்வியுறச் செய்ய முடியவில்லை. ஆட்சியாளர்களின் அடக்குமுறைகள் மட்டுமல்லாது, கடுமையான வெயில், பனி, மழை ஆகியவற்றோடு ஆட்கொல்லியான கொரோனாவையும் ஓராண்டு காலம் எதிர்கொண்டு விவசாயிகள் தனது நீதி காக்கும் போராட்டத்தில் உறுதியாக நின்றனர். போராட்டத்தில் 735 விவசாயிகள் உயிர்த் தியாகம் செய்தனர்.

எஃப்ஐஆரில் பெயர் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், பிரதமரின் ஆசியுடன் அஜய் மிஸ்ரா டெனி அமைச்சரவையில் தொடர்கிறார். இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு குற்றவாளிகளை கைது செய்ய உத்தரவிட்ட பிறகுதான் உத்தரபிரதேசத்தில் பாஜக தலைமையிலான மாநில அரசு ஆஷிஷ் மிஸ்ரா டெனி மற்றும் பிற குற்றவாளிகளை கைது செய்தது. அப்பாவி விவசாயிகளும் மாநில அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஜனநாயக இயக்கங்களின் மீது அடக்குமுறைகள், தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதை எதிர்த்து இந்த நாடு தழுவிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பாதுகாப்பு துறை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என மோடி அரசு சட்டம் இயற்றியது. வேலைநிறுத்தத்தை ஆதரிப்பவர்களும் கூட குற்றவாளிகளாக்கப்படுகின்றனர்.

ஒன்றியத்திலும், சில மாநிலங்களிலும் பாஜக நடத்தும் அரசுகள் மிகவும் ஜனநாயகமற்றவை. அடக்குமுறை மற்றும் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுபவை. தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பிற பிரிவினருக்கு எதிராகவும், தங்கள் உரிமைகளுக்காகவும், அடக்குமுறைகளுக்கு எதிராகவும் குரல் எழுப்புவோர் மீது, ஊபா உள்ளிட்ட கொடூரமான சட்டங்களைத் பயன்படுத்துகின்றன.

அரசாங்கத்தின் தவறுகளை கேள்வி கேட்கும் ஊடகவியலாளர்கள் மீது இன்று வீடுகளில் சோதனை நடத்தப்பட்ட செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அதே நேரத்தில், விவசாயிகள் நடத்திய, வரலாற்று சிறப்புமிக்க டெல்லி போராட்டத்தின் போது விவசாயிகள் மீது போடப்பட்ட பொய் வழக்குகள் இன்னும் திரும்பப் பெறப்படவில்லை.

இந்தியாவின் உழைக்கும் மக்களான தொழிலாளர்களும் விவசாயிகளும் ஒன்று சேர்ந்து, ஆர்எஸ்எஸ் பிஜேபி அரசாங்கத்தின் மக்கள் விரோத, விவசாயிகள் விரோத, தொழிலாளர் விரோத, தேச விரோத கொள்கைகளை அனைத்தையும் முறியடிக்க தொடர்ந்து போராடுவோம்.

போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்கும், மத்திய தொழிற்சங்கங்கள், கூட்டமைப்புகள், விவசாயிகள் முன்னணி சார்பாக வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறோம்.


சென்னை



கோவை



புதுச்சேரி


மதுரை



கரூர்



ராமநாதபுரம்



தூத்துக்குடி



தஞ்சாவூர்

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 07.10.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## போர்க்கோலம் பூண்ட அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின்

# 30வது அகில இந்திய மாநாடு




விக்கி மகேசரி


சீ.தினேஷ்

பீகார் மாநிலம் பெகுசராயில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் 30 ஆவது அகில இந்திய மாநாடு செப்டம்பர் 28ஆம் தேதி தொடங்கி, அக்டோபர் 1 ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டில் இருந்து 50 பிரதி நிதிகள் கலந்து கொண்டனர். நாட்டின் முதல் நிகழ்வாக பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்ற எழுச்சிமிகு பேரணி நடைபெற்றது. பேரணியின் இறுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அகில இந்திய தலைவர் சுபம் பானர்ஜி, செயலாளர் விக்கி மகேசரி ஆகியோர் தலைமை வகித்தனர். மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் டி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சந்தோஷ் குமார் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினார்.

இதை தொடர்ந்து நடைபெற்ற மாநாட்டில், தேசிய கல்விக் கொள்கை உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அனைத்து இளைஞர் பெருமன்றத்தின் பொதுச்செயலாளர் திருமலை மற்றும் பல்வேறு மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கில் கல்வி தொடர்பாக பிரின்ஸ் கஜேந்திர பாபு கருத்துரை ஆற்றினார்.



மாநாட்டில், அகில இந்தியத் தலைவராக விக்கி மகேசரி, பொதுச்செயலாளராக சீ.தினேஷ், பொருளாளராக சிராஜ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாட்டிலிருந்து தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர்களாக மாநிலச் செயலாளர் பா.தினேஷ், பொருளாளர் க.இப்ராகிம் ஆகியோரும், தேசியக்குழு உறுப்பினர்களாக ஜே.பி.வீரபாண்டியன், பா.சினேகா, முத்துலட்சுமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.


பா.தினேஷ்


க.இப்ராஹிம்


ஜெ.பி.வீரபாண்டியன்


பா.சினேகா


முத்துலட்சுமி







Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.